



# ஹலோ மெட்ராஸ்

ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி





மலர் 3 | சென்னை | தினசரி | 6 பக்கம் | செவ்வாய்க்கிழமை, நவம்பர் 28, 2023 | இதழ் 137

## ஆட்சி என்பது சொகுசானதல்ல, அது கூடுதல் பொறுப்பு தேர்தல்களத்திற்கான பயிற்சிக்களமாக அமையவிருக்கும் இளைஞரணியின்

# இரண்டாவது மாநில மாநாட்டின் வெற்றி அதனைப் பறைசாற்ற வேண்டும் தி மு க தலைவர் மு க ஸ்டாலின்

சென்னை, 28 நவம்பர் 2023: நம் உயிரினும் மேலான தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல். வாழ்வில் ஓர் பொன்னாள் என்று சொல்வது போல ஒரு சில நாட்கள் அமையும். போராட்டங்களும் நெருக்கடிகளும் சூழ்ந்த பொதுவாழ்வில் ஆட்சி என்பது சொகுசானதல்ல, அது கூடுதல் பொறுப்பாகும்.

அந்தப் பொறுப்பையேற்று, வருங்காலத்திற்கான தொலைநோக்குப் பார்வையுடன் மக்கள் நலன் காக்கும் திட்டங்களையும், மக்களுக்காகப் பாடுபட்ட தலைவர்களை வருங்காலத் தலைமுறைக்கு அறிமுகப்படுத்தும் நினைவுச் சின்னங்களையும் உருவாக்கும்போது மகிழ்வான தருணங்களாக அமையும். அத்தகைய நாட்கள் ஒவ்வொன்றும் வாழ்வில் ஒரு பொன்னாள்தான். இன்று அத்தகைய ஒரு பொன்னாள். அதற்குக் காரணம், சமூகநீதிக் காவலர் - இந்திய ஒன்றியத்தின் ஏழாவது பிரதமர் வி.பி.சிங் அவர்களின் திருவுருவச் சிலையைத் தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னையில், அதுவும் நான் பயின்ற மாநிலக் கல்லூரியில் முதலமைச்சர் என்ற முறையில் இன்று திறந்து வைக்கும் பெருமிதமான நிகழ்வு நடைபெறுகிறது. உத்தரபிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சர் திரு.அகிலேஷ் யாதவ் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ள, திரு.வி.பி.சிங் அவர்களின் துணைவியார் திருமதி.சீதாசிங் மற்றும் வி.பி.சிங் அவர்களின் குடும்பத்தினர் பங்கேற்கும் இனிய விழாவாக அது அமையவுள்ளது. எமர்ஜென்சி காலத்தில் திரு.ஜெயப்பிரகாஷ் நாரயணன் அவர்கள் மேற்கொண்ட மாற்று அரசியல் கூட்டணிக்குப் பிறகு, இந்தியாவில் வலுவான ஒரு மாற்று அணி அமைந்தது என்றால் அது 1988-ஆம் ஆண்டில் உருவான தேசிய முன்னணிதான். அதன் உருவாக்கத்தில் மிக முக்கிய பங்கு வகித்தவர் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்கள். முத்தமிழறிஞர் கலைஞரின் மனசாட்சியான முரசொலி மாறன் அவர்கள் டெல்லியின் அரசியல் தட்பவெப்ப நிலை அறிந்தவர். அவருடைய பங்களிப்பும் இதில் முக்கியமானது. அது மட்டுமல்ல, அண்டை மாநிலமான ஆந்திராவின் முதலமைச்சராக இருந்த என்.டி.ராமராவ் அவர்களை ‘கன்வீனராக’க் கொண்ட தேசிய முன்னணியின் தொடக்க விழா 1988-ஆம் ஆண்டு முப்பெரும் விழா நேரத்தில், சென்னையில்தான் மிகப் பிரம்மாண்டமான பேரணியுடனும் பொதுக்கூட்டத்துடனும் நடைபெற்றது. திராவிட முன்னேற்றக் கழகம், தெலுங்குதேசம், ஜனமோர்ச்சா, ஜனதா, காங்கிரஸ்(எஸ்), அசாம் கண பரிஷத், லோக் தளம் உள்ளிட்ட கட்சிகள் இணைந்து தேசிய முன்னணி உருவானது. தலைவர் கலைஞர் அவர்களுடன் வி.பி.சிங் அவர்களும், என்.டி.ராமராவ் உள்ளிட்ட தலைவர்களும் பார்வையிட்ட தேசிய முன்னணி தொடக்க விழாப் பேரணியில் கழகத்தின் இளைஞரணி வீறுநடை போட்டு அணிவகுத்து வந்தபோது மிகப் பெரிய அளவில் எழுச்சி ஆரவாரத்தைக் காண முடிந்தது. இளைஞரணி உருவாக்கப்படுவதற்கு முன்பு வரை தி.மு.கழகத்தின் மாநாடுகளையொட்டியும், சிறப்பு நிகழ்வுகளின்போதும் தொண்டர்கள் அணிவகுத்து வருவதற்கு ‘ஊர்வலம்’ என்றுதான் பெயர். இளைஞரணி உருவான பிறகே, ஊர்வலம் என்பது



‘பேரணி’ என்று பெயர் பெற்றது. தி.மு.கழகத் தொண்டர்களை உடுப்பணியாத ராணுவம் என்றார் பேரறிஞர் அண்ணா. அந்த உடுப்பணியாத ராணுவம், கலைஞர் காலத்தில் உருவாக்கப்பட்ட இளைஞரணியால், உங்களில் ஒருவனான என்னுடைய தலைமையில் சீருடை தரித்து, உடுப்பணிந்த ராணுவம் போல பேரணிகள் பலவற்றை பீடுநடைபோட்டு, பெருமிதத்துடன் நடத்திக் காட்டியது. தேசிய முன்னணி தொடக்க விழா பேரணி அறிவாலயத்தில் தொடங்கி, அண்ணா மேம்பாலத்தில் ஏறி, அண்ணா சாலையில் அணிவகுத்தபோது வங்கக் கடல்தான் மனிதத் தலைகளாகத் தலைநகர் சென்னையில் புகுந்ததோ என்று அகில இந்தியத் தலைவர்கள் பலர் வியக்கும் வகையிலும், தி.மு.க.வின் அரசியல் எதிரிகள் வியர்க்கும் வகையிலும் பிரம்மாண்டமாக அமைந்தது. அதன்பிறகு, 1990-ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற மாநில மாநாட்டிலும், அதே ஆண்டு முப்பெரும் விழாவை ஐம்பெரும் விழாவாக (பெரியார் - அண்ணா - தி.மு.கழகம் பிறந்த நாள் ஆகியவற்றுடன் டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு மற்றும் மண்டல் கமிஷன் வெற்றி விழா இவற்றையும் இணைத்து) கொண்டாடியபோது, தலைநகர் சென்னை குலுங்க மற்றொரு மாபெரும் பேரணி நடைபெற்றது. இந்த மூன்று பேரணிகளிலும் உங்களில் ஒருவனான என் தலைமையில் பட்டாளத்துச் சிப்பாய்கள் போல கழகத்தின் இளைஞரணியினர் வெண்சீருடையில் வீறுநடை போட்டு வந்ததை சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்கள் கண்டு மகிழ்ந்ததையும், அது குறித்து அவர் ஆச்சரியத்துடன் வினவியபோது, “என் மகன்“ என்று தலைவர் கலைஞர் அவர்கள் சுட்டிக்காட்டி, என் உழைப்புக்கு அங்கீகாரம் வழங்கியதையும் மறக்க முடியாது. இளைஞரணியின் பிரம்மாண்டமான பேரணியுடன் தொடங்கப்பட்ட தேசிய முன்னணிக்கு தேர்தல் களத்தில் முதல் மகத்தான பெரும் வெற்றியைப் பெற்றுத்தந்தவர் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர்தான். அவர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் 1989 ஜனவரியில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்று, 13 ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு ஆட்சியை அமைத்தது. திரு.வி.பி.சிங் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்க, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தான் கட்டி முடித்த வான்புகழ் வள்ளுவர் கோட்டத்தில் முதல் முறையாக கால் பதித்து, மூன்றாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பினை ஏற்றார். உங்களில் ஒருவனான நான் முதன் முதலாக ஆயிரம் விளக்கு தொகுதியில் இருந்து சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றதும் அந்தத் தேர்தல்களத்தில்தான்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் பெற்ற மகத்தான வெற்றியைத் தொடர்ந்து 1989-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய முன்னணியின் ஆட்சி அமைந்தது. வி.பி.சிங் அவர்கள் பிரதமர் பொறுப்பினை ஏற்றார். அவரைச் சந்தித்து வாழ்த்து தெரிவித்தபோது, என்னிடம் தன் அன்பைப் பொழிந்ததுடன், பேரணியை முன்னின்று நடத்தி வந்த பாங்கையும் பாராட்டி மகிழ்ந்தார். அதைவிட அவர் நமக்குத் தந்த பெருமகிழ்ச்சி என்பது, மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி - இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒன்றிய அரசின் வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு கிடைக்கச் செய்ததுதான். திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கையான சமூகநீதியை, இந்தியாவின் தவிர்க்க முடியாத அரசியல் கொள்கையாக மாற்றிக் காட்டியவர் வி.பி.சிங். அவருடைய இந்தச் சிறப்பான முடிவின் பின்னணியில் ஊக்கசக்தியாக விளங்கியவர் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்கள். சமூகநீதிக் காவலர் எனப் பெயர் பெற்ற வி.பி.சிங் ஆட்சியை, சமூக அநீதியை காலம் காலமாக ஆதரித்தும் - நிலைநாட்டியும் வரும் பா.ஜ.க. கவிழ்த்தது. ஓராண்டு கூட முழுமையாகப் பதவியில் இல்லாவிட்டாலும் இந்தியாவின் மிகச் சிறந்த பிரதமர்களின் வரிசையிலே நிலையான இடத்தைப் பிடித்திருப்பவர் வி.பி.சிங் அவர்கள். அத்தகைய மாமனிதருக்கு இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாடு அரசின் சார்பில் திருவுருவச் சிலை நிறுவப்பட்டுள்ளது. அன்று இளைஞரணிச் செயலாளரகவும் இன்று கழகத் தலைவராகவும் தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும் உள்ள உங்களில் ஒருவனான நான் அதனைத் திறந்து வைக்கின்ற நல்வாய்ப்பினைப் பெற்றுள்ளதால்தான், வாழ்வில் ஒரு பொன்னாள் என்று இந்நன்னாளைக் குறிப்பிட்டேன். ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு முன் சமூகநீதிக்காகவும், மாநில உரிமைக்காகவும் தேசிய முன்னணி தொடங்கப்பட்டபோது, கழகத்தின் இளைஞரணி எத்தகைய எழுச்சிமிக்க பேரணியை நடத்திக் காட்டியதோ, அதுபோல, சமூகநீதியை முற்றிலுமாக அழிக்கத் துடிக்கும் நீட் தேர்வுக்கு எதிராகவும், மாநில உரிமைகளைப் பறித்திடும் ஒன்றிய பா.ஜ.க அரசிடமிருந்து இந்தியாவைக் காப்பாற்றுவதற்காகவும் மக்களின் ஆதரவை நாடிக் கையெழுத்து இயக்கத்தையும், இரு சக்கர வாகனப் பரப்புரைப் பேரணியையும் மிகச் சிறப்பாக நடத்தியுள்ளது இன்றைய இளைஞரணி. முத்தாய்ப்பாக, டிசம்பர் 17-ஆம் நாள் சேலத்தில் ‘மாநில உரிமை மீட்பு முழக்க’த்துடன் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு நடைபெறவிருக்கிறது. இளைஞரணிச் செயலாளரும் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான தம்பி உதயநிதி இன்று தன் பிறந்தநாளில் என்னிடம் வாழ்த்துகளைப் பெற்றுள்ளார். அவரை மட்டும் நான் வாழ்த்தவில்லை. இரண்டாவது மாநில மாநாட்டை வெற்றிகரமாக நடத்திட வேண்டும் என அயராது பாடுபடும் இருபத்தைந்து இலட்சம் இளைஞரணி உடன்பிறப்புகளையும் நான் வாழ்த்தி மகிழ்கிறேன். மாநாட்டை இளைஞரணி நடத்தினாலும் கழகத்தின் ஒவ்வொரு உடன்பிறப்புக்கும் இதில் பங்கேற்கும் உரிமையுண்டு. இந்த மாநாடு, இன்னும் சில மாதங்களில் நாம் எதிர்கொள்ளவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான பயிற்சிக் களம். கழகத்தினர் கூடுகின்ற பாசறைக் கூடம். அதனால்தான் நேற்று (நவம்பர் 26) நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தின் மையப் பொருளாக இளைஞரணி மாநாட்டிற்கான ஆயத்தப் பணிகள் குறித்தும்,

அதனை வெற்றிகரமாக நடத்தி முடிப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. 2007-ஆம் ஆண்டு உங்களில் ஒருவனான என் தலைமையில் இளைஞரணி செயல்பட்டபோது, அதன் வெள்ளி விழா ஆண்டையொட்டி முதல் மாநில மாநாடு நடைபெற்றது. இப்போது தம்பி உதயநிதி அமைச்சராக இருப்பதுபோல அப்போது நான் அமைச்சர். இப்போது நான் முதலமைச்சராக இருப்பதுபோல அப்போது தலைவர் கலைஞர் முதலமைச்சர். இளைஞரணி மாநாட்டுப் பணிகளை நான் முன்னின்று அப்போது மேற்கொண்ட போது, அதன் ஒவ்வொரு அசைவையும் கண்காணித்து, நெறிப்படுத்தி வழிநடத்தியவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அதே பொறுப்புணர்வுடன்தான் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் என் ஆலோசனைகளை வழங்கியிருக்கிறேன். கழகத்தின் சார்பில் நடத்தப்படுகின்ற ஒவ்வொரு மாநாடும் வெற்றிக்கான விரைவுச்சாலை. அதில் கொள்கைப் பட்டாளம் வீறுநடை போடும். மாநாடு தொடங்குவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பே உடன்பிறப்புகளிடம் எழுச்சி உருவாகிவிடும். மாநாடு முடிந்து ஆறு மாதங்கள் கடந்தாலும் உத்வேகம் குறையாத களப்பணி தொடரும். எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளுங்கட்சியாக இருந்தாலும் நம் கொள்கையுணர்வு ஒரு போதும் குறைவதில்லை. ‘அனைவருக்கும் அனைத்தும்’ என்கிற திராவிட மாடல் ஆட்சியை நாம் நடத்தி வருகிறோம். கலைஞர் உரிமைத் திட்டம், விடியல் பயணத் திட்டம், புதுமைப் பெண் திட்டம் உள்ளிட்ட பெண்களின் நலன் காக்கும் திட்டங்கள் நேரடிப் பயன்களைத் தருவதால் தமிழ்நாட்டு பெண்களின் நம்பிக்கைகுரிய இயக்கமாகத் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே இருக்கிறது. அதுபோல இளைஞர்களுக்கான நான் முதல்வன் திட்டம், திறன் மேம்பாட்டுப் பயிற்சி, புதிய வேலைவாய்ப்புகள், மாவட்டந்தோறும் வேலை வாய்ப்பு முகாம்கள், விளையாட்டுப் பயிற்சிகளுக்கான ஊக்கம் இவற்றை திராவிட மாடல் அரசு நிறைவேற்றி வருகிறது. பொய்களை விற்று அதில் கூலி பெற்று இளைஞர்களை ஏமாற்றும் கூட்டம் ஒரு புறம், வதந்திகளை பரப்பி - வன்முறையை விதைத்து தமிழ்நாட்டில் கால் ஊன்றி விடலாம் எனத் தப்புக் கணக்கு போடும் கூட்டம் மறுபுறம், தங்களை அடிமைகளாக விற்றுக் கொண்டு தமிழ்நாட்டின் உரிமைகளை அடமானம் வைத்து விட்டுப் போன முதுகெலும்பற்ற கூட்டம் இன்னொரு புறம். இந்த மோசடி அரசியல் சக்திகளை எதிர்கொண்டு, மக்கள் நலன் காக்கும் திராவிட மாடல் ஆட்சியை வழங்கி வரும் தி.மு.கழகமும் அதன் தோழமை சக்திகளும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு - புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளையும் முழுமையாக வென்றாக வேண்டும். அப்போதுதான் இந்திய அளவில் நம் இந்தியா கூட்டணி வலுவான ஆட்சியை அமைக்கும். இளைஞரணி முன்னெடுத்துள்ள நீட் விலக்கு என்ற இலக்கினை வெற்றிகரமாக எட்ட முடியும். மாநில உரிமைகளை மீட்டெடுக்க முடியும். இவற்றை மனதில்கொண்டு, இளைஞரணி மாநாட்டை வெற்றிகரமாக நடத்திட மாவட்டக் கழகச் செயலாளர்கள் செயலாற்ற வேண்டும் என்பதை நேற்றைய கூட்டத்தில் எடுத்துரைத்தேன். தேர்தல்களத்திற்கான பயிற்சிக்களமாக அமையவிருக்கும் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாட்டின் வெற்றி அதனைப் பறைசாற்ற வேண்டும். நெல்லையில் நடந்த இளைஞரணியின் முதலாவது மாநில மாநாட்டின்போது, புதிய ஆத்திசூடியை வழங்கினார் முத்தமிழறிஞர் கலைஞர். அதில், கழகம் வில்லாம் நின் அணியே கணையாம் என்று எழுதியிருந்தார். களத்தில் பாய்வதற்குத் தயாராக இருக்கும் கணைகளாக இளைஞரணியினர் செயலாற்றி வருகிறார்கள். அவர்களுக்குத் துணை நிற்கவும், இந்தியா திரும்பிப் பார்க்கும் வகையில் மகத்தான வெற்றி மாநாடாக அமையவும் மாநாட்டுத் தலைவர் தம்பி உதயநிதி அழைக்கிறார். கழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும், அந்தந்த மாவட்டங்களுக்குட்பட்ட அனைத்துக் கிளைகளிலிருந்தும் தேர்தல் களத்திற்கான வீரர்களாக உடன்பிறப்புகள் திரளட்டும். கடல் இல்லாச் சேலம், கருப்பு - சிவப்புக் கடலினைக் காணட்டும்.







# கவனிக்கப்படாத பித்தப்பை நோய் மோசமான விளைவுகளை உண்டு பண்ணலாம்

**பேராசிரியர் நீலமேகம் தொப்ப கபாலி துறை தலைவர் - இரைப்பை, குடல் மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை நிபுணர், ஃபோர்டிஸ் மலர், அடையார்**



சென்னை, 28 நவம்பர் 2023: இதயம், சிறுநீரகம் உள்ளிட்ட முக்கிய உடலுறுப்புகள் மீது கவனம் செலுத்துகிறோம். ஆனால் அக்கறை செலுத்தாத முக்கிய உடலுறுப்புகளுள் பித்தப்பை குறிப்பிடத்தக்கது. ஏதேனும் கோளாறு ஏற்பட்டால் மட்டுமே அதைப் பற்றி நாம் கவலைப்படுகிறோம். வயிற்றின் வலது மேற்பகுதியில் பித்தப்பை அமைந்துள்ளது. கல்லீரல் உற்பத்தி செய்யும் பித்தநீரைச் சேமிப்பதுடன், உண்ணும் போது அதைப் பித்த நாளம் வழியே சிறு குடலுக்கு அனுப்புவதே பித்தப்பையின் முக்கியப் பணியாகும். நமது உணவில் கலந்துள்ள கொழுப்பை உடைத்துச் ஜீரணிக்க பித்தநீர் உதவுகிறது. உணவில் கொழுப்புச் சத்து இருப்பின், பித்தநீரை சிறுகுடலுக்குள் செலுத்தி ஓரளவு ஜீரணமான உணவுடன் கலந்து கொழுப்பை உடைக்கிறது. சிறுகுடல் இப்பணியைச் செய்து கொண்டிருக்கும் போது, சுரக்கப்பட்ட பித்தநீர் மீண்டும் பித்தநீர்ப்பைக்குள் சென்று தேவைப்படும் வரை சேமிப்பிலிருக்கும். பித்தப்பை பிரச்சினை ஏப்போது ஏற்படுகிறது?

கல்லீரலிலிருந்து பித்தப்பைக்கும் பின்னர் அங்கிருந்து சிறுகுடலுக்கும் பித்தத்தை எடுத்துச் செல்லும் குழாயே பித்த நாளமாகும். அடைப்புக்கு முக்கியக் காரணமாக விளங்குவது கல் ஆகும். இது பித்தம், கொழுப்பு மற்றும் ஃபாஸ்ஃபரஸ் கொழுப்பிகளின் செறிவில் ஏற்படும் மாற்றம் காரணமாக உருவாகிறது. சில தருணங்களில் கற்கள் இன்றியும், சிறுகுடல் தொடங்கி பித்தப்பை வரையிலும் வலி அதிகரித்துக் கடுமையான பித்தப்பை அழற்சிக்கு வழிவகுக்கும். பித்தப்பை பிரச்சியின் சமிஞைகளும், நோய்க்குறிகளும்

பித்தப்பை பிரச்சினையின் முக்கிய நோய்க்குறி வயிற்றுவலிதான். பித்தம் கடினமாகிப் பித்தக் கற்களாக உருமாறிப் பாதையை அடைப்பதால், விலா எலும்புகளுக்கு கீழே மிதமான மற்றும் கடுமையான வலி ஏற்படும். ஆரம்பத்தில் 30 நிமிடம் தொடங்கி பல மணி நேரம் நீடிக்கும் இந்த வலி பின்னர் தொடர் வலியாக மோசமடையும். வயிற்றின் வலது பக்க வலியுடன் கீழ்க்காணும் நோய்க்குறிகளும் தென்படும். அவை பின்வருமாறு:

பசியின்மை

களைப்பு

எடை குறைதல்

கண்களும், சருமமும் மஞ்சள் நிறமாதல் (மஞ்சள் காமாலை) மற்றும் கருநிறச் சிறுநீர்

தட்பவெப்ப ஏற்ற இறக்கம்

அரிப்பு

இரவு நேரத்தின் வியர்த்தல்

வெளிர் நிற மலம்

வயிற்றின் வலது மேற்பக்கம் அவ்வப்போது ஏற்படும் வலி

பித்தப்பை புற்றுநோய் உள்ளிட்ட அரிதான காரணங்களால் பித்தநீர் நாளங்கள் குறுகவோ, அடைத்துக் கொள்ளவோ சாத்தியங்கள் உண்டு. இப்புற்றுநோய் எந்த வகையான நோய்க்குறிகளையும் தொடக்கத்தில் காட்டாமல், கடைசி கட்டத்தில் மட்டுமே தெரிய வரும். பித்தப்பைப் பிரச்சினைகளுடன் இக்குறிக்கள் கலந்துவிடுவதால், இதனைத் தனியாக அடையாளம் காண்பது இயலாமல் போகிறது. புற்றுநோய் அல்லாத சவ்வுக் கட்டியின் வளர்ச்சி ஏற்படலாம். கண்களுக்குப் புலப்படும் மற்றும் உணரக்கூடிய அறிகுறிகளைச் சவ்வுக் கட்டி ஏற்படுத்தாது. பித்தப்பை பிரச்சினைகள்

பித்தப்பைக் கல் தோன்றுவதற்கான அடிப்படை தெளிவாகத் தெரிவதில்லை. இருப்பினும் அது உருவாவதை அதிகரிக்கும் அபாயங்களுக்குப் பல காரணங்கள் உள்ளன. சில அபாயங்கள் பித்தப்பைப் புற்றுநோயுடன் ஒத்துப் போகின்றன. அவை பின்வருமாறு:

அதீத உடல் இடை

வயது மூப்பு

அதிக கொழுப்பு

கருத்தடை மாத்திரைகள் / ஈஸ்ட்ரோஜன் மாத்த்ரைகளை உட்கொள்ளுதல்

உடல் எடை வேகமாகக் குறைதல் நீரிழிவு

பாக்டீரியா தொற்று

குடும்ப உறுப்பினர்களுக்கு பித்தக்கற்கள் இருத்தல் சில பித்தப்பை புற்றுநோய் ஆபத்து காரணிகளுடன் ஒத்துப்போகின்றன.

நீரிழிவு நோயுடன் இப்பிரச்சனை கண்டறியப்பட்டால், சரியாக மதிப்பீடு செய்வது முக்கியம் அல்லது அது காங்கரீன் அல்லது பஸ்டுலர் பித்தப்பைக்கு வழிவகுக்கும்.

பித்தப்பை பிரச்சினைகளைக் கண்டறிதல்

உங்கள் குடும்ப மருத்துவர் அறிகுறிகளின் அடிப்படையில் அவற்றை ஆய்வு செய்து பித்தப்பை பிரச்சினைகளைக் கண்டறிவதுடன், உடலைப் பரிசோதித்தும் பிரச்சினைகளை தீவிரத்தை முடிவு செய்வார். பித்தக்கல் இருப்பதை மருத்துவர் சந்தேகித்தால், கிழ்க்காணும் பரிசோதனைகளை மேற்கொள்ளலாம்: -

பிலிரூபின் அளவு, இரத்தக் கழிவுப் பொருள், கணையம் அல்லது கல்லீரல் நொதிய அளவுகள் மற்றும் / அல்லது தொற்று சமிஞைகள்

பித்தப்பை மற்றும் பித்தைக்கல் உருவாக்கம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளைக் காண வயிறு அல்ட்ர சவுண்ட்

பித்தப்பை மற்றும் பித்தநீர் நாள உருவப்படங்களை உருவாக்கவும், பகுப்பாய்வு செய்யவும் வயிறு சிடி ஸ்கேன்

பித்தநீர் நாளத்திற்கு சிறு நிழற்படக் கருவியைச் செலுத்திப் பித்தப் பை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளின் கட்டமைப்பை விரிவாகப் பார்க்க எண்டோஸ்கோபிக் ரெட்ரோகிரேட் கோலேஜியோபேன்கிரிடோ யடோகிராஃபி (இ ஆர் சி பி) பரிசோதனை பித்தப்பை பிரச்சினைகளுக்கான மருத்துவம் மற்றும் சிகிச்சைத் தீர்வுகள்:

பித்தப்பைக் கற்களைக் அகற்ற அறுவை சிகிச்சைக்கு மாற்றாகப் மருத்துகள் பரிந்துரைக்கப்படும். உர்சோடியோல் உள்ளிட்ட சில மருந்துகள் பித்தக்கற்களில் உள்ள கொழுப்பைக் கரைக்கப் பயன்படுத்தப்படும். இச்சிகிச்சை மூலம் பிரச்சினையைத் தீர்க்கப் பல மாதங்கள் ஆகும் என்றாலும் 5 மிமி அளவுக்கும் குறைந்த அளவிலான சிறு கற்கள் மட்டுமே கரையும். நோயைக் கண்டறிய மருத்துவர் இஆர்சிபி சிகிச்சை முறையைப் பரிந்துரைப்பார். பித்தக் கற்கள் காரணமாக பித்தநீர் நாளத்தில் அடைப்பு இருப்பின், சிகிச்சையை உடனடியாகத் தொடங்குவார். பித்தப்பையிலேயே பித்தக்கற்கள் காணப்படுவதுடன், தொடர் / கடுமையான வலி இருந்தால், உடனடி அறுவை சிகிச்சை அவசியமாகும். பித்தப்பை அறுவை சிகிச்சை மூலம் பித்தப்பை முழுமையாக அகற்றப்படும். பித்தக் கற்கள் காரணமாகக் கடுமையான வலி ஏற்பட்டால் அறுவை சிகிச்சையே கடைசி தீர்வாகும். லேபரோஸ்கோபிக் என்னும் வயிற்றறை நுண்ணோக்கி அறுவை சிகிச்சையில் சிறு துளையிட்டுப் பித்தக் கற்கள் அகற்றப்படும். பித்தப்பை நோய் தீவிரமானால் திறந்தநிலை அறுவை சிகிச்சை மூலம் நீக்கப்படும். பித்தப்பை புற்று நோய் கண்டறியப்பட்டால் உங்கள் மருத்துவர் ரேடியேஷன் கதிர்வீச்சு அல்லது கீமோதெராபி உள்ளிட்ட கூடுதல் சிகிச்சைகளைப் பரிந்துரைப்பார்.

பித்தப்பை நோய்த் தடுப்பு முறைகள்:

வருமுன் காப்போம் என்னும் பழமொழிக்கேற்ப நோய்க்கான சிகிச்சையை விடவும், நோய்த் தடுப்பே சிறந்தது. பித்தப்பை பிரச்சினைகளைத் தடுக்கக் கீழ்க்காணும் வழிமுறைகள் உதவும். தினசரி சமச்சீரான உணவை உண்ணுதல்

பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் தரமற்ற உணவைத் தவிர்த்தல்

சரியான பிஎம்ஐ பராமரித்தல்

முறையான உடற்பயிற்சி மேற்கொள்ளல்

மதுபானம் தவிர்த்தல்

சர்க்கரை மற்றும் கொழுப்பு அளவுகளைக் கட்டுக்குள் வைத்தல்

உரிய நேரத்தில் உரிய சிகிச்சை அளிக்கத் தவறும் பட்சத்தில், பித்தப்பைப் பிரச்சினை தொடர்வதுடன், காலவரையின்றி வலியை ஏற்படுத்தும். சில பிரச்சினைகள் சிறு அசௌகரியத்தைத் தந்தாலும், இன்னும் சில உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் சுகாதாரப் பிரச்சினைகளை வழிவகுக்கும். பெரும்பான்மை பித்தப்பைப் பிரச்சினைகள் சிகிச்சை மூலம் முழுமையாக குணமடைவதால், உரிய நேரத்தில் மருத்துவரைச் சந்தித்து, நோக்குறிகளைக் கண்டறிந்து சிகிச்சை எடுத்துக் கொள்வது முக்கியம்.

# நடிகை குஷ்பு மன்னிப்பு கேட்க வலியுறுத்தி காங்கிரஸ் போராட்டம்



சென்னை, 28 நவம்பர் 2023: 'சேரி' என்ற வார்த்தையை குஷ்பு பயன்படுத்தியை கண்டித்து காங்கிரஸ் கட்சியினர் போராட்டம் நடத்தினர்.

நடிகர் மன்சூர் அலிகான் நடிகை திரிஷா பற்றி வெளியிட்ட சர்ச்சை கருத்துக்கு நடிகை குஷ்பு கண்டனம் தெரிவித்தார். அப்போது சமூக வலைத்தளத்தில் குஷ்புவுக்கு எதிராக பதிவிட்டவருக்கு அளித்த பதிவில் சேரிமொழி என்று குறிப்பிட்டதற்கு காங்கிரஸ் எஸ்.சி. துறை கண்டனம் தெரிவித்தது. மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் வற்புறுத்தியது. ஆனால் 'சேரி' என்ற பெயரில் எத்தனையோ ஊர்கள் உள்ளன. பிரஞ்சு மொழியில் சேரி என்பதற்கு அன்பு என்று அர்த்தம். நல்ல எண்ணத்தோடு வெளியிட்ட பதிவை உள்நோக்கத்தோடு எதிர்த்தால் நான் பொறுப்பல்ல. எனவே வருத்தம் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை என்று மறுத்துவிட்டார்.

ஆனால் காங்கிரஸ் எஸ்.சி. துறையினர் குஷ்பு மன்னிப்பு கோர வலியுறுத்தி மாநில தலைவர் ரஞ்சன் குமார் தலைமையில் இன்று குஷ்பு வீட்டை முற்றுகையிட போவதாக அறிவித்தனர். இதையொட்டி இன்று காலை காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் சென்னை சாந்தோம் பிரதான சாலையில் உள்ள நடிகை குஷ்பு வீட்டின் முன்பு கூடினர். மாநில எஸ்.சி. துறை தலைவர் ரஞ்சன்குமார் தலைமையில் கண்டன கோஷங்கள் எழுப்பி போராட்டம் நடத்தினார்கள்.

# புவிசார் அரசியல் ஆபத்து மற்றும் முதலீடு - சிதவேலாயுதம், தலைமை நிர்வாக அதிகாரி & நிறுவனர், ஆலிஸ் ப்ளூ



சென்னை, 28 நவம்பர் 2023: தற்போதைய காலத்தில் உலகம் முன்னெப்போதையும் விட அதிகமாக இணைக்கப்பட்டுள்ளது. உலகமயமாக்கல் என்பது ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு பொருட்களையும் சேவைகளையும் கொண்டு செல்வது மட்டுமல்ல. இதன் பொருள் தொழில்நுட்ப பரிமாற்றம், தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள், பிராந்திய கொள்கை இணைப்புகள், பாதுகாப்பு கூட்டாண்மை போன்றவற்றுக்கு மேலும் விரிவடைந்துள்ளது. இதன் பொருள் ஒரு முதலீட்டாளர் தனது குடியுரிமை நாட்டின் பொருளாதார நிலையைப் பார்த்து சந்தைகள் அல்லது பிற சொத்து வகைகளில் முதலீடு செய்ய முடியாது. உலகெங்கிலும் உள்ள பொருளாதாரங்கள் அவற்றின் வட்டி விகிதங்கள், பணவீக்கம், வளர்ச்சி, பிராந்திய ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை ஒருவர் கூர்ந்து கவனித்து, முதலீட்டிற்கு எந்தப் பகுதி/பிராந்தியங்கள் கவர்ச்சிகரமானவை என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.. இவை அனைத்திற்கும் மத்தியில், திடீரென ஒரு சில நாடுகளுக்கு இடையே போர் போன்ற சூழல் ஏற்பட்டால், ஒருவருக்கு பிடித்த முதலீட்டு பிராந்தியத்தில் ஏற்படும் தாக்கங்கள் சந்தை மட்டத்திலும், அவர்/அவள் முதலீடு செய்யும் குறிப்பிட்ட துறைகள் மற்றும் பங்குகளிலும் பெரியதாக இருக்கும். இப்போது, இது முதலீட்டாளருக்கான புவிசார் அரசியல் அபாயங்களில் ஒன்று என்று அழைக்கப்படுகிறது.

வலுவான பொருளாதாரத்தின் மத்திய வங்கித் தலைவர், அமெரிக்கா, இப்போது விகிதக் குறைப்புக்குத் தயாராக இருப்பதாகச் சொன்னால், பொருளாதாரங்கள் இன்று மிகவும் இணைக்கப்பட்டுள்ளன, இந்தியா உட்பட பெரும்பாலான நாடுகளும் தங்கள் வட்டி விகிதங்களைக் குறைப்பது பற்றி சிந்திக்கத் தொடங்கும். வீதம், ஆட்டோமொபைல், வங்கிகள் போன்ற விகித உணர்திறன் மற்றும் சுழற்சித் துறைகளில் ஒதுக்கீட்டைத் தொடங்க விரும்பும் முதலீட்டாளர்களுக்கு இது உலகம் முழுவதும் சாதகமான முதலீட்டுச் சூழலை உருவாக்கும்.

இந்த ஆண்டு அக்டோபரில் தொடங்கிய சமீபத்திய இஸ்ரேல்-ஹமாஸ் போரை ஒருவர் நினைவு கூர்ந்தால், உலகளாவிய முதலீட்டாளர் சமூகம் உலகப் பொருளாதாரங்கள் எவ்வாறு பிரதிபலிக்கும் மற்றும் எண்ணெய் விலைகள் எங்கு செல்கின்றன என்பதைக் கண்டுபிடிக்க முயற்சிப்பதை நிறுத்தியது. இப்பகுதியில் உள்ள பல அண்டை நாடுகளுக்கு முக்கிய ஏற்றுமதி பொருளாக உள்ளது.

உண்மையில், ரஷ்யா-உக்ரைன் போர் தொடங்கிய 2022 பிப்ரவரியில் ஒரு வருடத்திற்கு முன்பு ஒருவர் திரும்பிச் சென்றால், பிரெண்ட் கச்சா எண்ணெய் சிறிது நேரத்தில் \$85/பிபிஎல்லிருந்து \$100/பிபிஎல் வரை உயர்ந்தது. யுத்தம் யூரோ மண்டலம் முழுவதும் மிகவும் கடுமையான பணவீக்க நிலைமைக்கு வழிவகுத்தது, குறிப்பாக எரிசக்தி மற்றும் உணவு பொருட்களின் விலைகள் உயர்ந்தன. பணவீக்கத்தின் தாக்கத்தைக் குறைக்க, உள்ளூர் வங்கிகள் உலகம் முழுவதும் வட்டி விகிதங்களை அதிகரிக்கத் தொடங்குகின்றன.

பங்குச் சந்தையின் நிலைப்பாட்டில் இருந்து, உலகளாவிய நிறுவன முதலீட்டாளர்கள் பங்கு போன்ற ஆபத்தான சொத்து வகுப்புகளிலிருந்து மூலதனப் பாதுகாப்பிற்காக தங்கம் போன்ற பாதுகாப்பான புகலிடங்களுக்கும் அதே நேரத்தில் பணவீக்க-ஹெட்ஜ் ஆகவும் மாறத் தொடங்கினர். கூடுதலாக, அவர்கள் நிலையான-வருமானக் கருவிகளில் அதிக அளவில் முதலீடு செய்யத் தொடங்கினர், இது கணிசமாக குறைந்த ஆபத்து மட்டத்தில் அதிக வருவாய் விகிதங்களைப் பெறுகிறது.

ஒரு சில பிராந்தியங்கள்/நாடுகளுக்கு இடையிலான மோசமான புவிசார் அரசியல் சூழ்நிலைகள் வேறு சில பிராந்தியங்களுக்கும் நல்லது. எடுத்துக்காட்டாக, அதிகரித்து வரும் அமெரிக்க-சீனா பதட்டங்கள், உலகளாவிய விநியோகச் சங்கிலி மையமாக இந்தியா மாறுவதற்கான சிறந்த வாய்ப்பைத் திறக்கிறது. இந்தியா தள்ளுபடி விலையில் பெற்று வரும் ரஷ்ய எண்ணெய், நாட்டின் இறக்குமதி கட்டணத்திற்கும் இது மற்றொரு கூடுதல் சலுகையாக உள்ளது.

முதலீட்டாளரின் முதலீட்டு முடிவெடுப்பதில் புவிசார் அரசியல் அபாயத்தின் வெயிட்டேஜ் நிச்சயமாக கணிசமாக உயர்ந்துள்ளது என்பதை இந்த எடுத்துக்காட்டுகள் அனைத்தும் சுட்டிக்காட்டுகின்றன. எனவே, ஒவ்வொரு முதலீட்டாளரும் புரிந்துகொள்வதற்கும், தகவலறிந்த மற்றும் சரியான நேரத்தில் முடிவுகளை எடுப்பதற்கும் இந்த சூழ்நிலைகள் முக்கியமானவை. அதே நேரத்தில், புவிசார் அரசியல் ஆபத்து என்பது ஒரு முறையான ஆபத்து என்பதையும், அதற்கு 100% தயாராக இருக்க முடியாது என்பதையும் முதலீட்டாளர்கள் நினைவில் கொள்ள வேண்டும். இது கெட்டதில் இருந்து நல்லதாகவும் அதற்கு நேர்மாறாகவும் மாறிக்கொண்டே இருக்கிறது, அதைக் கண்டறிந்து, நீண்ட கால நிலையான வருமானத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# பான் இந்தியா ஆக்ஷன் படமாக கவனம் ஈர்க்கும் ஹரோம் ஹரா முன்னணி நட்சத்திரங்கள் வெளியிட்ட ஹரோம் ஹரா டீசர்




சென்னை, 28 நவம்பர் 2023: ஸ்ரீ சுப்ரமண்யேஷ்வரா சினிமாஸ் சார்பில் எஸ்.எஸ்.சி. தயாரித்திருக்கும் படம் ஹரோம் ஹரா. இந்த படத்தின் கதாநாயகனமாக சுதீர் பாபு நடிக்கிறார். ஞானசேகர் துவாராாக இயக்கும் ஹரோம் ஹரா திரைப்படத்தின் டீசரை பிரபாஸ், மம்மூட்டி, டைகர் ஷெராஃப், விஜய் சேதுபதி மற்றும் கிச்சா சுதீப் ஆகியோர் தெலுங்கு, மலையாளம், இந்தி, தமிழ் மற்றும் கன்னடா மொழிகளில் வெளியிட்டனர்.

டீசர் முழுக்க அதிரடி ஆக்ஷன் காட்சிகளும், மாஸ் சம்பவங்களும் இடம்பெற்று உள்ளன. 1980 காலக்கட்டத்தில் நடைபெறுவது போன்ற கதையம்சம் கொண்ட ஹரோம் ஹரா படத்தை இயக்குனர் ஞானசேகர் துவாரகா ஒவ்வொரு காட்சியிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் படி கதையை தேர்வு செய்திருக்கிறார். இவற்றுக்கு பக்கபலமாக இருக்கும் வகையில், வசனங்களும் பட்டையை கிளப்பும் வகையில் உள்ளன.

பல எதிரிகள் தனது வீழ்ச்சிக்காக காத்திருக்கும் சூழலில், சாதாரண மனிதனாக இருந்து, நகரின் சக்திவாய்ந்த நபர்களில் ஒருவராக உருவெடுக்கும் வகையில் சுப்ரமணியம் என்ற கதாபாத்திரத்தில் சுதீர் பாபு நடித்துள்ளார். இவருக்கு ஜோடியாக மாள்விகா ஷர்மா நடித்துள்ளார். மேலும் லக்கி லக்ஷமன், ரவி கலே மற்றும் அர்ஜூன் கௌடா ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

படத்தின் ஆக்ஷன் காட்சிகள் அனைத்தையும் ஒளிப்பதிவாளர் அரவிந்த் விஸ்வநாதன் பிரமாண்டமாக படமாக்கி இருக்கிறார். இவருடன் ஒவ்வொரு காட்சியிலும் வலுப்படுத்தும் வகையில், சைத்தன் பரத்வாஜ் பின்னணி இசையில் மிரட்டி உள்ளார். தயாரிப்பு மேற்பார்வையிலும் சிறப்பான பணி மேற்கொள்ளப்பட்டு இருப்பது டீசரில் அம்பலமாகி இருக்கிறது.

ஹரோம் ஹரா படத்தின் டீசர் படத்திற்கான எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கும் நிலையில், அடுத்த ஆண்டு துவக்கத்தில் படம் தெலுங்கு, தமிழ், கன்னடா, மலையாளம் மற்றும் இந்தி உள்ளிட்ட மொழிகளில் வெளியிடப்பட இருக்கிறது.

நடிகர்கள் விவரம்: சுதீர் பாபு, மாள்விகா ஷர்மா, சுனில், ஜெ.பி. அக்ஷரா கௌடா, லக்கி லக்ஷமன், ரவி கலே மற்றும் அர்ஜூன் கௌடா.

# ஜியோ மாமி விருது பெற்ற பிரவீன் கிரி இயக்கத்தில் அன்ச்செயின்ட் பிக்சர்ஸ் தயாரிப்பில் மும்பையை பின்னணியாக கொண்ட விறுவிறுப்பான திரைப்படம் 'மான்குர்த்' வெளியீட்டுக்கு தயாராகி வருகிறது



சென்னை, 28 நவம்பர் 2023: பல்வேறு விருதுகளை பெற்ற குறும்படங்களை இயக்கியுள்ள பிரவீன் கிரி, இயக்குநர் இமயம் திரு பாரதிராஜா முதன்மை வேடத்தில் நடிக்கும் திரைப்படம் ஒன்றிலும் பணியாற்றி இருக்கிறார்.

அவரது 'மான்குர்த்' திரைப்படம் மும்பையின் பரபரப்பான வீதிகளில் படமாக்கப்பட்டுள்ளது. அங்கு வசிக்கும் இரண்டு சாதாரண சிறுபான்மையினர் ஒரு அசாதாரண அரசியல் விளையாட்டில் அவர்களுக்கே தெரியாமல் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இடைத்தேர்தலை முன்னிட்டு ஒரு அரசியல் கட்சி செய்யும் சதியில் முகமதும் அவரது மகள் நிஷாவும் பலிகடா ஆகிறார்கள். என்ன செய்வது என்று அவர்கள் தவிக்கும் நிலையில், நல்லெண்ணம் கொண்ட தலைவர் ஒருவர் அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கிறார். வஞ்சகர்கள் வலையில் இருந்து அவர்களால் தப்பிக்க முடிந்ததா இல்லையா என்பதை பரபரப்பாக சொல்லும் வகையில் 'மான்குர்ட்' உருவாகி உள்ளது.

மதங்களை தாண்டிய மனிதநேயத்தை பேசும் இப்படத்திற்கு ஹரிஷ் ராஹித்யா இசையமைத்துள்ளார், விஷ்வா ஒளிப்பதிவு செய்துள்ளார், ப்ரியன் பிரசாத் படத்தொகுப்பை கவனிக்க, ரிகேஷ் குமார் கலை இயக்கத்தை கையாண்டுள்ளார்.

படத்தின் முக்கிய கதாபாத்திரங்களில் 'மேதகு' புகழ் ராஜா, சௌந்தர்யா மனோகரன், சையத் பாஷா மற்றும் அல்கா சக்சேனா ஆகியோர் நடித்துள்ளனர். பாரதி கோலப்பன், எம்.ராஜா மற்றும் அம்மு பைரவி ஆகியோர் முக்கிய பங்களித்துள்ளனர். பன்முகத்தன்மை மிக்க 'மான்குர்த்' கதையில் தமிழ், இந்தி, மராத்தி போன்ற பல்வேறு மொழியினர் நடித்துள்ள நிலையில் பன்மொழித் திரைப்படமாக இது உருவாகி உள்ளது. திறமையான நடிகர்கள் மற்றும் தொழில்நுட்பக் குழுவினர் பங்களிப்போடு சுயாதீன திரைப்படமாக தயாராகியுள்ள 'மான்குர்த்', உலகெங்கும் நடைபெற்று வரும் சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட இருக்கிறது.

# 54-வது இந்திய சர்வதேசத் திரைப்படவிழாவில் ஐ.சி.எஃப்.டி-யுனெஸ்கோ காந்தி பதக்கத்தை ஆன்டனி சென் இயக்கிய டிரிஃப்ட் திரைப்படம் வென்றது

சென்னை, 28 நவம்பர் 2023: 54-வது இந்திய சர்வதேசத் திரைப்படவிழாவில் ஐ.சி.எஃப்.டி-யுனெஸ்கோ காந்தி பதக்கத்தை ஆன்டனி சென் இயக்கிய டிரிஃப்ட் திரைப்படம் வென்றது. கோவாவில் இன்று நடைபெற்ற நிறைவு விழாவில் இந்த விருது அறிவிக்கப்பட்டது.

அதிர்ச்சிகரமான மற்றும் பயங்கரமான யதார்த்தத்தால் அலைந்து திரியும் ஒரு புலம்பெயர்ந்த பெண்ணின் உணர்ச்சிகரமான சித்திரம் இந்த படம்.

வாழ்க்கையின் நிச்சயமற்ற தன்மைகளைக் கடந்து செல்வது எதிர்பாராத பிணைப்புகளுக்கு எவ்வாறு வழிவகுக்கும் என்பதை இப்படம் சித்தரிக்கிறது. இத்திரைப்படம் அலெக்சாண்டர் மக்சிக் எழுதிய 'எ மார்க்கர் டு மெசர் டிரிப்ட்' என்ற நாவலை அடிப்படையாகக் கொண்டது. ஐ.சி.எஃப்.டி பாரிஸ் மற்றும் யுனெஸ்கோவால் நிறுவப்பட்ட காந்தி பதக்கம் என்பது அமைதி, அஹிம்சை, இரக்கம் மற்றும் உலகளாவிய சகோதரத்துவம் குறித்த மகாத்மா காந்தியின் பார்வையை சிறப்பாக பிரதிபலிக்கும் ஒரு திரைப்படத்திற்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

# புதிய படத்தில் நடிக்கும் பிக்பாஸ் சிபி



சென்னை, 28 நவம்பர் 2023: கிரவுன் பிக்சர்ஸ் எஸ்.எம்.இப்ராகிம் தயாரிப்பில் உருவாகும் புதிய படத்தை அறிமுக இயக்குனர் பிரகாஷ் கிருஷ்ணன் இயக்க இருக்கிறார். வஞ்சகர் உலகம், மாஸ்டர் போன்ற படங்களில் நடித்த சிபி இந்த படத்தில் நாயகனாக நடிக்கிறார். இவருடன் குஷிதா கல்லப்பு, பருத்திவீரன் சரவணன், ஜெயபிரகாஷ் மற்றும் நிரோஷா ஆகியோர் இந்த படத்தின் முன்னணி கதாபாத்திரங்களாக நடித்துள்ளனர்.

இந்த படத்திற்கு ஜீவி பட வசனகர்த்தா பாபு தமிழ் வசனம் எழுத, ஒளிப்பதிவு கோபி கிருஷ்ணன், படத்தொகுப்பு பிரதீப், இசையமைப்பாளர் கேபர் வாசுகி மேற்கொண்டுள்ளனர்.

இன்னும் பெயரிடப்படாத இந்த படத்தின் படப்பிடிப்பு நவம்பர் 20-ம் தேதி சென்னையில் துவங்கியது.

# "டைகர்-3-ல் சல்மான் மற்றும் என்னுடைய மோதலை மக்கள் கொண்டாடுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்!"என்கிறார் இம்ரான் ஹாஷ்மி



சென்னை, 28 நவம்பர் 2023: யஷ் ராஜ் ஃபிலிம்ஸின் மிகப் பிரம்மாண்டமான தயாரிப்பான டைகர்-3 இல் இம்ரான் ஹாஷ்மி

தனது வில்லத்தனமான திருப்புமுனை ஏற்படுத்தும் நடிப்பின் மூலம் ஒவ்வொரு காட்சியிலும் நாட்டின் மிகப்பெரிய அதிரடி சூப்பர் ஸ்டார் சல்மான் கானுடன் நேருக்கு நேர் மோதும் போதும் அனைவரையும் கவர்ந்திருக்கிறார்.

யஷ் ராஜ் ஃபிலிம்ஸின் டைகர்-3 பிரமிக்க வைக்கும் அளவில் வெறும் 4 நாட்களில் உலகளவில் 169.75 கோடி நிகர வசூலையும் 272 கோடி மொத்த வசூலையும் பதிவு செய்துள்ளது, மேலும் மற்றொரு பெரிய வார இறுதி வசூலை வெள்ளிக்கிழமை முதல்

பதிவு செய்ய உள்ளது! தன் மீதும் டைகர்-3-ன் மீதும் மக்கள் பொழியும் அன்பால் சிலிர்த்துப் போயிருக்கிறார் இம்ரான்!

இம்ரான் கூறும்போது, "டைகர்-3-ன் படத்திற்கு கிடைத்த வரவேற்பையும், எனது நடிப்பின் மீது மக்கள் எந்த அளவிற்கு அன்பை பொழிந்திருக்கிறார்கள் என்பதையும் கண்டு நான் சிலிர்த்துப் போயிருக்கிறேன். நாங்கள் ஒரு நல்ல நோக்கத்தோடு படத்தை தொடங்கினோம், மேலும் படம் உலகளவில் ரசிகர்களை மகிழ்விக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆன்டி-ஹீரோவாக நடிக்கும் வாய்ப்பை நான் மிகவும் ரசித்தேன், மேலும் நம் நாட்டின் மிகப்பெரிய அதிரடி சூப்பர் ஸ்டாரான சல்மான் கானுடன் நேருக்கு நேர் மோதுவதை விட வேறேது சிறந்ததாக இருக்கும்! எங்கள் மோதலை மக்கள் ரசித்து மகிழ்ந்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன், மேலும் அது எனக்கு சிறந்த மதிப்பீடாகும்".

அவர் மேலும் கூறுகையில், "நான் எப்போதுமே நான் தேர்வு செய்யும் திரைப்படங்களின் மூலம் மக்களை மகிழ்விக்க விரும்புவேன் மற்றும் ஒரு எதிர்மறையான கதாபாத்திரத்திம் நான் இதுவரை முயற்சி செய்யாத விஷயங்களை முயற்சிக்க சுதந்திரம் அளித்தது. எனது வில்லத்தனமான திருப்புமுனை கதாபாத்திரத்திரத்தை ரசித்ததற்காகவும், டைகர்-3 படத்தை பாக்ஸ் ஆபிஸில் வெற்றிப் படமாக மாற்றியதற்காகவும் மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதித்யா சோப்ரா தயாரிப்பில் மணீஷ் ஷர்மா இயக்கத்தில் உருவான டைகர்-3 இந்தி, தமிழ், தெலுங்கு மொழிகளில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது.

# "மூன்று டைகர் படங்கள், மூன்று வெற்றிக் கதைகள். டைகர் படவரிசையின் 3 பாகங்களும் என் இதயத்தில் ஆழப் பதிந்து இருக்கிறது - சல்மான்



சென்னை, 28 நவம்பர் 2023: ஹிந்தி சினிமாவின் மிகப்பெரிய சூப்பர் ஸ்டார்களில் ஒருவரான சல்மான் கான், டைகர்-3-படத்தின் மிகப் பெரிய வெற்றியை பதிவு செய்வதன் மூலம் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளார்! ஒய்ஆர்எஃப் ஸ்பை யுனிவர்ஸ் திரைப்படம் உலகம் முழுவதும் 400 கோடி வசூல் செய்ததோடு நின்று விடாமல் ஹிந்தி சினிமா வரலாற்றில் இதுவரை இல்லாத மிகப்பெரிய தீபாவளி வெளியீட்டு வெற்றியை பதிவு செய்திருக்கிறது.

சல்மான் கூறும்போது, "மூன்று டைகர் படங்கள், மூன்று வெற்றிக் கதைகள். டைகர் படவரிசையின் 3 பாகங்களும் என் இதயத்தில் ஆழப் பதிந்து இருக்கிறது, மேலும் அது மக்களின் மனங்களிலும் அதற்கான இடத்தைப் பெற்றதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

டைகர் படவரிசையானது எனக்கு மிகவும் பிடித்தவைகளில் ஒன்றாகும், மேலும் நிச்சயமாக இது ஒரு பாரம்பரிய பிராண்டாகும், இது எனது திரைவாழ்க்கையில் எப்போதும் வெளிச்சமாக பிரகாசித்துக் கொண்டே இருக்கும்" என்றார்.

அவர் தனது டைகர் படவரிசை படங்களில் முதல் படமான 'ஏக் தா டைகர்' திரைப்படம் ஒரு பிரம்மாண்டமான டைகர் படவரிசைக்கான வெற்றிப்பாதையை வகுக்கும் என்றோ, புனையப்பட்ட ஒய் எஃப் ஆர் ஸ்பை யுனிவர்ஸிற்கான வெற்றிப் படிகளையும் உருவாக்கும் என்றோ சற்றும் எதிர்பார்க்கவில்லை!

சல்மான் கூறும்போது, "நான் ஏக் தா டைகர் படப்பிடிப்பில் இருந்தபோது, அடுத்த பாகம் எடுப்போம் என்று எனக்குத் தெரியாது, நம்ப முடியாத அளவிற்கு நாம் இப்போது அதன் மூன்றாம் பாகத்தை டைகர்-3-ன் மூலம் அடைந்துள்ளோம்! 2012 முதல் உலகளவில் அதன் பார்வையாளர்களை மகிழ்விக்கும் தனி படவரிசையாக உருவாகி உள்ளது.

எந்தவொரு படத்திற்கோ அல்லது படவரிசைக்கான அதன் வெற்றிக்கான ஆதாரம் அது எழுதும் வெற்றிக் கதையில் உள்ளது" என்றார்.

மேலும் அவர் கூறுகையில், "டைகர் படவரிசையானது அளவில்லா அன்பை பொழியும் அளவிற்கான உளவாளியை வழங்கியுள்ளது என்று நான் நினைக்கிறேன். நான் டைகர் திரைப்படத்தை சுவாசித்தேன் மற்றும் அதனுடன் வாழ்ந்தேன், எனக்கும் என் படங்களுக்கும் ரசிகர்கள் அளித்த அரவணைப்பிற்கும் பாராட்டுக்களுக்கும் அனைவருக்கும் நன்றி.

ஆதித்யா சோப்ரா தயாரிப்பில் மணீஷ் ஷர்மா இயக்கத்தில் உருவான டைகர்-3 இந்தி, தமிழ், தெலுங்கு மொழிகளில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
செவ்வாய்க்கிழமை,
நவம்பர் 28, 2023

# அதிக யூரிக் அமில அளவுகள் : சரியான நேரத்தில் கண்டறவது ஏன் முக்கியம்?

சென்னை, 28 நவம்பர் 2023: ஒரு நபரின் இரத்தத்தில் சாதாரண உடல் கழிவுப் பொருளான யூரிக் அமிலம் அதிக அளவில் இருந்தால், நோயாளியின் ஆரோக்கியத்தில் குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்படும். இந்த பொதுவான நிலை, ஹைப்பர்யூரிசிமியா என்றும் அழைக்கப்படுகிறது, இது உடனடி அறிகுறிகளுடன் இருக்காது, ஆனால் மக்களின் நல்வாழ்வில் அதன் நீண்டகால தாக்கம் குறிப்பிடத்தக்கதாக இருக்கலாம். இது பெரும்பாலும் கண்டறியப்படாமல் போவதால், ஆபத்துக் காரணிகளைக் கண்டறிவதிலும், முன்கூட்டியே கண்காணிப்பதற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அபாட் இன் இந்தியாவின், இணை மருத்துவ இயக்குனர் டாக்டர் கார்த்திக் பீதாம்பரன் அவர்கள், "அதிக அளவு யூரிக் அமிலம் உடலில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தினாலும், பெரும்பாலான நோயாளிகள் அறிகுறியற்றவர்கள். இது ஆபத்து காரணிகளைக் கண்டறிந்து, தங்களைத் தாங்களே முன்கூட்டியே பரிசோதித்துக்கொள்வது இன்றியமையாததாக ஆக்குகிறது, இதனால் அவர்கள் சரியான நேரத்தில் அதைக் கண்டறியவும், திறம்பட நிர்வகிக்கவும் மற்றும் தொடர்புடைய சிக்கல்களின் அபாயத்தைக் குறைக்கவும் முடியும். மருத்துவர்கள் மற்றும் நோயாளிகள் இருவருக்கும் ஆதரவளிக்கும் தீர்வுகளுடன் ஸ்கிரீனிங் மற்றும் பராமரிப்பு செயல்முறையை எளிதாக்க உதவுவதே எங்கள் முயற்சி. மக்கள் தங்கள் யூரிக் அமில அளவைக் கட்டுக்குள் வைத்திருக்க சரியான தகவல்களுடன் அதிகாரம் பெற்றிருப்பதை இது உறுதிப்படுத்துகிறது.

சென்னை எம் ஜி எம் ஹெல்த்கேரைச் சேர்ந்த சிறுநீரக மருத்துவர் டாக்டர் ஜார்ஜி ஆபிரகாம் அவர்கள், "ஒரு ஆய்வின்படி, நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் அல்லது இரண்டு நிலைகளும் உள்ள நோயாளிகளில் 30%க்கும் அதிகமானோர் ஹைப்பர்யூரிசிமியாவைக் கொண்டுள்ளனர். அதிக யூரிக் அமில அளவுகள் நாள்பட்ட சிறுநீரக நோய் மற்றும் கடுமையான சிறுநீரக காயத்தின் முன்னேற்றத்திற்கான ஆபத்து காரணிகளாகவும் இருக்கலாம். இருப்பினும், அறிகுறியற்ற சந்தர்ப்பங்களில், இது கண்டறியப்படாமல் போகலாம். ஒருவரின் ஆரோக்கியத்தை நன்கு நிர்வகிக்கவும், தொடர்புடைய நிலைமைகளைத் தடுக்கவும் அல்லது நிர்வகிக்கவும், ஆரம்பகால ஸ்கிரீனிங் மற்றும் உயர்த்தப்பட்ட யூரிக் அமிலத்தின் சரியான மேலாண்மை மிகவும் முக்கியம்.

பொதுவாக, சிறுநீரகங்கள் உடலில் உற்பத்தி செய்யப்படும் யூரிக் அமிலத்தின் 60% முதல் 65% வரை நீக்குகின்றன, இது சிறுநீர் கழிக்கும் போது இரத்த ஓட்டத்தில் இருந்து வடிகட்டப்படுகிறது. மீதமுள்ளவை குடல் (குடல் மற்றும் பித்தம்) வழியாக அகற்றப்படுகின்றன. அதிக யூரிக் அமிலம் உருவாகும் போது அல்லது சரியாக வெளியேற்றப்படாமல் இருந்தால், அது ஒரு பிரச்சனையாக இருக்கலாம். இது படிகங்கள் உருவாக வழிவகுக்கும், இது ஒருவரின் மூட்டுகள் அல்லது சிறுநீரகங்களில் சேகரிக்கப்பட்டு கீல்வாதத்தை (கீல்வாதத்தின் வலி வடிவம்), சிறுநீரக கற்கள் அல்லது பிற உடல்நல சிக்கல்களை ஏற்படுத்தும். இந்த பிரச்சனை எவ்வளவு பொதுவானது? இந்தியாவில் ஹைப்பர்யூரிசிமியா சீராக அதிகரித்து வரும் சவாலாக இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பல்வேறு இந்திய மாநிலங்களில் பரவல் மாறுபடுகிறது, சில பிராந்தியங்களில் 47.2% வரை உள்ளது. அதிக யூரிக் அமிலம் குறிப்பாக ஆண்கள் மற்றும் வயதானவர்கள் உட்பட குறிப்பிட்ட மக்களிடையே பொதுவானது.

இரத்தத்தில் யூரிக் அமிலத்தின் அளவு அதிகரிப்பது சிறுநீரகங்கள், இரைப்பை குடல் அல்லது ஹார்மோன் நோய்களால் ஏற்படலாம், இது உடலில் இருந்து யூரிக் அமிலத்தை சாதாரணமாக அகற்றுவதை சீர்குலைக்கிறது. ஒரு நபர் அதிக அளவு கொழுப்பு இறைச்சிகள், கடல் உணவுகள், ஆல்கஹால், உலர்ந்த பீன்ஸ் அல்லது பட்டாணி, பிரக்டோஸ் நிறைந்த உணவுகளை உட்கொள்ளும் போது அதிக யூரிக் அமில அளவுகள் ஏற்படலாம், அவை ஆப்பிள்கள், தர்பூசணி மற்றும் பல பழங்களில் இயற்கையாக நிகழும் சர்க்கரை அதிகம்.

ஹைப்பர்யூரிசிமியாவைக் கண்டறிவதற்கான பயணம்

அதிக யூரிக் அமில அளவு கொண்ட சில நபர்களுக்கு கடுமையான மூட்டு வலி, மிருதுதன்மை, சிவத்தல் அல்லது வீக்கத்தை உருவாக்கலாம். அதிக யூரிக் அமில அளவு சிறுநீரக கற்களை விளைவித்தால், ஒருவரின் கீழ் முதுகு அல்லது அடிவயிற்றில் வலி, குமட்டல், சிரமம் அல்லது சிறுநீர் கழிக்கும் போது வலி போன்ற அறிகுறிகளும் இருக்கலாம். இருப்பினும், ஹைப்பர்யூரிசிமியா உள்ளவர்களில் கிட்டத்தட்ட 60% பேர் அறிகுறிகளை அனுபவிப்பதில்லை. இதனால், பலர் கண்டறியப்படாமல் உள்ளனர். இருப்பினும், அறிகுறியற்ற ஹைப்பர்யூரிசிமியா என்பது இருதய நோய்கள், உடல் பருமன், நீரிழிவு மற்றும் பல நிலைமைகளுக்கு ஆபத்து காரணியாகும். , நீங்கள் ஆணாகவோ, வயதானவராகவோ, உடல் பருமனாகவோ அல்லது அதிக உடல் நிறை குறியீட்டெண் கொண்டவராகவோ அல்லது சிவப்பு இறைச்சி, கடல் உணவுகள், மதுபானம் அல்லது பிரக்டோஸ் போன்றவற்றை அதிகமாக உட்கொள்ளும் உணவைக் கொண்டிருக்கும் போது இந்த நிலை ஏற்படும் அபாயம் அதிகரிக்கும். உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, சிறுநீரக நோய், ஹைப்பர்லிபிடேமியா மற்றும் ஹைப்போதைராய்டிசம் போன்ற நிலைமைகள் உள்ளவர்களும் அதிக ஆபத்தில் உள்ளனர். உண்மையில், சில புகழ்பெற்ற மருத்துவ அமைப்புகள் இருதய நோய்கள், நீரிழிவு நோய், வளர்சிதை மாற்ற நோய்க்குறி மற்றும் சிறுநீரகக் கற்கள் உள்ள நோயாளிகளுக்கு ஹைப்பர்யூரிசிமியா பரிசோதனையை பரிந்துரைத்துள்ளன. யூரிக் அமில அளவு அதிகரிப்பதற்கான ஒருவரின் சாத்தியமான அபாயத்தைக் கணக்கிடக்கூடிய இடர் மதிப்பீட்டு அளவுகோல் போன்ற எளிய கருவிகள் உள்ளன.

# 80 வயது மூதாட்டிக்கு குடிநீர் கொடுப்பாரா ஆட்சித்தலைவர்




**மணச்சநல்லூர் வட்டம் நம்பர் 2 கரியமாணிக்கம் ஊராட்சி சிறுகாம்பூர் குரும்பட்டி கிராமத்தில் அர்ஜுன தெருவில் வசிக்கும் காமாட்சி 80 வயது மூதாட்டி பல வருடமாக குடிநீர் இனைப்புக்காக கலெக்டர், மணச்சநல்லூர் பி டி ஓ மற்றும் தலைவரிடமும் மனு கொடுத்து இன்று வா நாளை வா அலைக்கடித்து வருகின்றனர். இவரது வயதை கருத்தில் கொண்டு திருச்சி மாவட்ட கலெக்டர் பிரதீப் குமார் விறைந்து நடவடிக்கை எடுக்க ஆவண செய்வாரா?.**

# சிந்தனைக்கான திரைப்படம்: சினிமாவில் மனநலத்தை நேர்மறையாக சித்தரிக்கும் சக்தி

## ஐடிசியின் ஃபீல் குட் வித் ஃபியாமா மனநல ஆய்வு 2023 சுவாரஸ்யமான உண்மைகளை வெளிப்படுத்துகிறது

சென்னை, 28 நவம்பர் 2023: இந்தியாவில், மனநலம் மற்றும் மன ஆரோக்கியம் குறித்த மனப்பான்மை படிப்படியாக அதிகரித்த விழிப்புணர்வு, களங்கத்தை குறைத்தல் ஆகியவற்றுக்கான உரையாடல்களுடன் உருவாகி வருகிறது. அதன் 3ஆம் ஆண்டு மனநல தினத்தில், ஐடிசியின் ஃபீல் குட் வித் ஃபியாமா மனநலம் பற்றிய ஆய்வு, மனநலம் மற்றும் மன ஆரோக்கியம் குறித்த இளம் இந்தியாவின் மாறிவரும் அணுகுமுறைகளை மேலும் புரிந்துகொள்ள சுவாரஸ்யமான உண்மைகளை வெளிப்படுத்துகிறது. ஜென்இசட் மற்றும் மில்லேனியல்ஸ் சேர்ந்தவர்களின் மனநலத்திற்கான நம்பிக்கைகள், நடத்தைகள், முக்கிய அழுத்தங்கள், மன அழுத்தத்தை குறைத்தல் வரம்பு ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த ஆய்வை நீல்சன்ஐக்யூ சிறப்பாகச் செய்தது.

உலகின் பல பகுதிகளைப் போலவே, பண்பாட்டுத் தாக்கங்கள் மற்றும் நடத்தைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் சினிமா முக்கியப் பங்கு வகிக்கிறது. ஃபியாமா மனநலம் பற்றிய ஆய்வு, 2023-இல், சினிமாவில் மன ஆரோக்கியத்தை சிறப்பாகச் சித்தரிப்பது உணர்வுகளையும் உரையாடல்களையும் பாதிக்கும் என்று ஜென்இசட் மற்றும் மில்லேனியல்ஸ் சேர்ந்தவர்கள் நம்புவதாக ஃபீல் குட் வித் ஃபியாமா வெளிப்படுத்துகிறது. சமீபத்திய ஆண்டுகளில் மனநலம் என்பது ஒளிபரப்பு உள்ளடக்கத்தில் சில முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது மேலும் நேர்மறையான சித்தரிப்புகளை ஆராய வேண்டியதன் அவசியத்தை இந்த ஆய்வு எடுத்துக்காட்டுகிறது. இந்த ஆய்விற்கு பதிலளித்தவர்களில் 82% பேர், மனநலம் பற்றிய கருத்துக்களைப் பாதிக்கும் வகையில் டிவி/ஓடிடி கருவியாக இருக்கும் என்று கருதுகின்றனர். 77% டிவி/திரைப்படங்கள் மற்றும் ஓடிடி உள்ளடக்கம் மனநல உரையாடல்களை இயக்கும் என்று நம்புகின்றனர். மன ஆரோக்கியம் மற்றும் அன்றாட மன அழுத்தத்தைக் கையாள்வது பற்றிய செயலூக்கமான உரையாடல் ஒரு நேர்மறையான மாற்றத்தைக் கண்டாலும், பாப் கலாச்சாரக் குறிப்புகளில் அதைச் சிறப்பாக விளக்க வேண்டிய அவசியம் உள்ளது. 78% இந்தியர்கள் மனநலத்தின் 'வியத்தகு' பிரதிநிதித்துவம் மக்களை சிகிச்சை பெறுவதைத் தடுக்கலாம் என்றும் 79% திரைப்படங்களில் நேர்மறையான மனநல சித்தரிப்புகள் களங்கத்தை நிவர்த்தி செய்ய உதவும் என்று நம்புகிறார்கள். 81% பேர் மனநலத்திற்கு ஆதரவளிக்கும் பிரபலங்கள் வலுவான தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் கருதுகின்றனர். ஜென்இசட் அல்லது மில்லேனியல்ஸ் ஆக இருந்தாலும், ஒவ்வொருவரும் பல்வேறு காரணங்களால் மன அழுத்தத்துடன் போராடுகிறார்கள். வேலை, உறவுகள், மனநலம், மன நல்வாழ்வுக்கான ஒட்டுமொத்த அணுகுமுறைகள் ஆகியவற்றில் உள்ள பல்வேறு அழுத்தங்கள் மற்றும் மன அழுத்தத்தை குறைக்கும் காரணிகளை இந்த ஆய்வு முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. இந்த ஆய்வின் முக்கிய அம்சங்கள்-

வேலை மற்றும் தொழில்சார்ந்த முடிவுகள் வேலை அழுத்தம் மற்றும் தொழில் தொடர்பான முடிவுகள் இந்திய இளைஞர்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தும் மற்றும் மனநலத்தை பாதிக்கும் காரணிகளில் முதலிடத்தில் உள்ளது. தொழில்சார்ந்த கவலையில் மில்லேனியல்களை ஜென் இசட் 18% விஞ்சுகிறார்கள். பணியிடத்தில் அழுத்தமாக இருக்கும் 10-இல் 9 இந்தியர்கள், சிறந்த வேலை வாழ்க்கை சமநிலைக் கொள்கைகளை மதிக்கிறார்கள். 62% பதிலளித்தவர்கள் உடல் உழைப்பை மீண்டும் தொடங்குவதில் மன அழுத்தத்தை உணர்கிறார்கள். மனநலப் பிரச்சினைகள் தொடர்பான கவலைகளுக்கு 57%க்கும் அதிகமான ஜென்இசட் சேர்ந்தவர்கள் தொழில்சார்ந்த முடிவுகளைக் கூறுகின்றனர். 42% இந்திய ஆண்கள் உடனடி தொழில்முறை உதவியை நாடுகிறார்கள் மற்றும் 35% ஆன்லைன் ஆலோசனையை தேர்வு செய்கிறார்கள். பெங்களூரில் இருந்து பதிலளித்தவர்களில் 53% பேர் மனநலம் தொடர்பான பிரச்சினைகள் வேலையில் உள்ள உறவுகளையும் பாதிக்கும் என்று நம்புகிறார்கள்.உறவுகள் ஃபீல் குட் வித் ஃபியாமா மனநல ஆய்வு 2023 இவ்வாறு வெளிப்படுத்துகிறது, 38% இந்தியப் பெண்கள் மனநலத்தைப் பாதிக்கும் முக்கியக் காரணங்களில் மோசமான உறவுகளைக் காரணம் காட்டுகிறார்கள், மேலும் 64% இந்தியர்கள் சமூகத் தரநிலைகள் சோர்வுகளை ஏற்படுத்துவதாக நம்புகிறார்கள். 82% இந்தியர்கள் தாங்கள் சிகிச்சை பெறுவதற்கு தங்கள் பெற்றோர் ஆதரவாக இருப்பார்கள் என்று நம்புகிறார்கள். ஒருவர் சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டியிருந்தால் பெற்றோர்கள் நம்பிக்கைக்கு உரியவர்களாகக் கருதப்படுவதையும் இது பிரதிபலிக்கிறது. இருப்பினும், 29% இந்தியர்கள் மட்டுமே தங்கள் மனநலப் பயணத்தில் உடன்பிறந்தவர்களை நம்பிக்கைக்கு உரியவர்களாகக் கருதுகின்றனர்; கணவன் அல்லது மனைவி ஆதரவு 31% பேருக்கு ஓரளவு சிறப்பாக உள்ளது. 61% இந்தியர்கள் மனநலப் பிரச்சினைகளால் அன்புக்குரியவர்களுக்கு உதவ இயலாமையால் உதவியற்றவர்களாக உணர்கிறார்கள்.

இந்தியாவில் உடல்நலம் & ஆரோக்கியம் பெரும்பாலான இந்தியர்கள் மனநல அறிகுறிகளைத் தவறவிடுகிறார்கள், தரவரிசையில் டெல்லி 85% உடன் முதலிடத்தில் உள்ளது. 72% இந்தியர்கள் மனநலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட ஒருவரை அறிந்திருக்கிறார்கள், மேலும் மனச்சோர்வுடன் மோசமான மனநலத்துடன் உள்ள ஒருவருடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். 86% மும்பைவாசிகள் சிகிச்சையை கடைசி முயற்சியாக தேர்வு செய்கிறார்கள் என்று இந்த ஆய்வு மேலும் வெளிப்படுத்துகிறது. ஒரு நேர்மறையான முன்னேற்றமான படியில், மனநலப் பிரச்சினைகள் வெட்கப்பட வேண்டியவை அல்ல என்று 84% பேர் நம்புவதாகவும் இந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது. 54% இந்தியர்கள் ஒட்டுமொத்த நல்வாழ்வுக்கு மனநலம் முக்கியம் என்று கூறுகின்றனர். யோகா, தியானம், உடற்பயிற்சி மூலம் 58% பேர் மன அழுத்தத்தை எதிர்த்துப் போராடுகிறார்கள். ஒரு சுவாரஸ்யமான எடுத்துக்காட்டில், 67% இந்திய ஜென்இசட் மற்றும் 63% மில்லேனியல்கள் தங்கள் தலைமுறை சாதகமான வாய்ப்புகளை தவறவிடுவோமோ என்ற கவலையில் இருந்து, தவறவிடுவதில் மகிழ்ச்சி என்று மறுவரையறை செய்வதாக நம்புகிறார்கள்! மன அழுத்தம், அதிகரித்து வரும் பதட்டம் ஆகியவற்றுக்கு பல்வேறு காரணங்கள் இருந்தபோதிலும், சமூக ஊடகங்கள் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நம்பும் 51% இந்தியர்கள் ஆன்லைன் ஆலோசனையை ஒரு சிகிச்சை விருப்பமாக மாற்றுகின்றனர். இளைஞர்கள் மன அழுத்தத்தை நீக்குவதற்கான மாற்று வழிகளை ஆராய்ந்து வருகின்றனர் - 86% இந்தியர்களுக்கு மன அழுத்தம் மற்றும் எதிர்மறை சிந்தனைகளைச் சமாளிக்க இசையே விருப்பமான தேர்வாகும். இந்த ஆய்வு குறித்து ஐடிசி லிமிடெட் பர்சனல் கேர் புராடக்ட்ஸ் பிசினஸின் பிரதேச தலைமை நிர்வாகி சமீர் சத்பதி அவர்கள் இவ்வாறு பேசினார், "விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மற்றும் கலந்துரையாடல்களின் படிப்படியான அதிகரிப்புடன் மனநலத்தைப் புரிந்துகொள்வதில் ஏற்பட்டுள்ள சில நேர்மறையான மாற்றங்களைக் காண்பது மகிழ்ச்சி அளிக்கிறது. ஃபியாமா மனநல ஆய்வு, இந்தியாவின் இளைஞர்கள், மனநலம் மற்றும் நல்வாழ்வு குறித்த அவர்களின் அணுகுமுறை குறித்து தொடர்ந்து கவனத்தை ஈர்க்கிறது. அதன் 3வது பதிப்பில், இந்த ஆய்வு சில முக்கியமான உண்மைகளை வெளிப்படுத்துகிறது, அவை நிச்சயமாக மிகவும் பரவலான உரையாடல்களுக்கு ஒரு ஊக்கியாக இருக்கும், மேலும் இப்பிரச்சினை பற்றிய நுணுக்கமான புரிதல் மற்றும் மனநல ஆதரவை மேம்படுத்தும். மனநலத்தை மிகவும் செயலூக்கமுள்ள உரையாடலாக மாற்ற ஃபியாமாவின் முயற்சியானது சிந்தனையைத் தூண்டுவதைத் தாண்டியது. மைண்ட்ஸ் பவுணடேஷனுடன் இணைந்து, இது மானிய விலையிலான மெய்நிகர் சிகிச்சைக்கான அணுகலையும் செயல்படுத்துகிறது."

தி மைண்ட்ஸ் பவுண்டேஷனுடன் இணைந்து ஐடிவி ஃபியாமா தனது முதல் மெய்நிகர் கிளினிக்கையும் தொடங்கியுள்ளது. இந்த மெய்நிகர் கிளினிக் உரிமம் பெற்ற நிபுணர்களால் வழங்கப்படும் மனநல சிகிச்சைக்கு மலிவுக் கட்டணத்தில் அணுகலை செயல்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது. சங்கடம் அல்லது நிலவும் களங்கம் பற்றிய பயம் இல்லாமல் ஒரு நெருக்கமான மெய்நிகர் இடத்தில் உதவி பெற தனிநபர்களை ஊக்குவிக்கும் பொருத்தமான தளம் இது. மைண்ட்ஸ் பவுண்டேஷன் மெய்நிகர் கிளினிக்கிற்கான உயர் தகுதிவாய்ந்த சிகிச்சையாளர்களின் குழுவை சிறப்பாக ஒன்றிணைத்துள்ளது, இதன் மூலம் ஒருவரின் சொந்த தனியுரிமையின் வசதிக்கேற்ப நிபுணர் ஆலோசனை, சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்குகிறது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# மூன்று நாயகிகளுடன் நடித்திருப்பதை கீர்த்தி தவறாக எடுத்துக் கொள்ளமாட்டார் - சபாநாயகன் ஆடியோ வெளியீட்டில் அசோக்செல்வன்

## சபாநாயகன் உங்கள் மன அழுத்தத்திற்கு மாமருந்தாக இருக்கும்" - அசோக் செல்வன்

*சென்னை, 28 நவம்பர் 2023:* அறிமுக இயக்குநர் சி எஸ் கார்த்திகேயன் இயக்கத்தில் அசோக் செல்வன் நாயகனாக நடித்திருக்கும் திரைப்படம் சபா நாயகன். நாயகிகளாக மேகா ஆகாஷ், கார்த்திகா முரளிதரன் மற்றும் சாந்தினி சௌத்ரி நடித்திருக்கிறார்கள். இவர்களுடன் பிரபல யூடியூப் சேனலான நக்கலைட்ஸின் அருண், எருமைசாணி சேனல் புகழ் ஜெய்சீலன், சிமீக்ஷீமீவீயீவீமீபீ ஸிணீவீணீறீவ ஸ்ரீராம், போன்றோரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார்கள். இவர்களுடன் மயில்சாமி, துளசி, மைக்கேல் தங்கதுரை, ஸெரிலின் சேத், விவியா சந்த் மற்றும் பலர் நடித்திருக்கிறார்கள். அசோக் செல்வனின் ஓ மை கடவுளே திரைப்படத்தில் ஹிட் பாடல்களைக் கொடுத்த லியோன் ஜேம்ஸ் இப்படத்திற்கும் இசையமைத்திருக்கிறார். ஒளிப்பதிவாளர் பாலசுப்ரமணியத்துடன் இணைந்து அவரின் சீடர் தினேஷ் புருஷோத்தமன் மற்றும் பிரபு ராகவ் ஆகியோர் ஒளிப்பதிவு செய்திருக்கின்றனர். கிளியர் வாட்டர் பிக்சர்ஸ் சார்பாக அரவிந்த் ஜெயபாலன், ஐ சினிமா சார்பாக அய்யப்பன் ஞானவேல் மற்றும் கேப்டன் மெகா எண்டர்டெயின்மெண்ட் சார்பாக கேப்டன் மேகவாணன் ஆகியோர் இணைந்து தயாரித்திருக்கும் இப்படம் டிசம்பர் 15ம் தேதி அன்று வெளியாக இருக்கிறது. இப்படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பு சென்னையில் நடைபெற்றது.

இதில் படத்தின் இயக்குநர் சி எஸ் கார்த்திகேயன் பேசும்போது,

" சபாநாயகன் திரைப்படம் நம் பள்ளிகால மற்றும் கல்லூரி கால மலரும் நினைவுகளை மீள் உருவாக்கம் செய்யும் ஒருவித நாஸ்டால்ஜியா வகை திரைப்படம் ஆகும். நம் எல்லோருக்கும் பள்ளி மற்றும் கல்லூரி காலங்களில் ஏதோவொரு பெண்ணின் மீது ஒருவித க்ரஸ் இருந்திருக்கும். இப்படி பள்ளி கால வாழ்க்கை, கல்லூரி கால வாழ்க்கை, திருமண வாழ்க்கை என்று வாழ்க்கையின் மூன்றுவித காலகட்டங்களைப் பற்றி இப்படத்தில் பேசி இருக்கிறோம். இப்படம் அனைத்து ரசிகர்களும் குடும்பத்தோடு வந்து பார்த்து ரசிக்கும்படியான திரைப்படம். என் மீது நம்பிக்கை வைத்து முதல்படம் இயக்குவதற்கு வாய்ப்பளித்த ஐ சினிமாஸ் அய்யப்பன் ஞானவேல் மற்றும் பிற தயாரிப்பாளர்கள் அனைவருக்கும் நன்றி. வாய்ப்பளித்த நடிகர் அசோக் செல்வனுக்கும் நன்றி" என்றார்.

படத்தின் இசையமைப்பாளரான லியோன் ஜேம்ஸ் பேசும் போது,

"ஓ மை கடவுளே திரைப்படத்தின் பாடல்களுக்குக் கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக நானும் நண்பர் அசோக்செல்வனும் இந்த சபாநாயகன் திரைப்படத்தில் இணைந்து இருக்கிறோம். இத்திரைப்படம் நாம் நண்பர்கள் குழுவுடன் சேர்ந்து திரையரங்கிற்கு ஒன்றாக சென்று குதூகலிப்பதற்கான திரைப்படம்., படம் மற்றும் பாடல்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. உங்கள் அனைவருக்கும் ரொம்பவே பிடிக்கும் என்று நம்புகிறோம். பாடல்களுக்கான காட்சி தொகுப்புகள் மிகவும் சிறப்பாக அழகான முறையில் எடுக்கப்பட்டு இருந்தது. இது போன்ற ஜாலியான திரைப்படத்திற்கு இசையமைத்தது ஒரு நல்ல அனுபவம். படம் பார்க்கும் அனைவருக்குமே ஒரு நாஸ்டால்ஜியா டிரிப் சென்று




வந்த அனுபவம் கண்டிப்பாக கிடைக்கும். அனைவருக்கும் நன்றி." என்றார்.

படத்தின் ஒளிப்பதிவாளர்களில் ஒருவரான பாலசுப்ரமணியம் பேசும் போது,

"எல்லோருக்கும் வணக்கம். இப்படத்தின் தயாரிப்பாளர் என் நண்பர். அவர் தான் இயக்குநர் கார்த்திகேயனை எனக்கு அறிமுகப்படுத்தினார். கார்த்திகேயன் கதை சொல்லும் போது எனக்கு கதை மிகவும் பிடித்தது. இது போன்ற கதைகள் இப்பொழுதெல்லாம் வருவதில்லை என்று எனக்குத் தோன்றியது. . மூன்றுவித காலகட்டங்கள் படத்தில் இருக்கிறது. இதில் கல்லூரி கால வாழ்க்கையை முதலாவது ஷெட்யூலில் படப்பிடிப்பு செய்தோம். அதில் நான் ஒளிப்பதிவு செய்தேன். பிறகு என் சீடர் தினேஷ் இரண்டாம் ஷெட்யூல் அதாவது பள்ளிகால வாழ்க்கையை ஒளிப்பதிவு செய்தான்ஞ் பிரபு ராகவ் கல்லூரி காலத்திற்குப் பின்னர் வரும் வாழ்க்கைப் பகுதியை ஒளிப்பதிவு செய்தார். படக்குழுவினருக்கும் என் வாழ்த்துக்கள் "என்று பேசினார்.

படத்தின் மற்றொரு ஒளிப்பதிவாளரான தினேஷ் புருஷோத்தமன் பேசும் போது,

" ஒளிப்பதிவாளர் பாலசுப்ரமணியம் என் குரு. இந்த வாய்ப்பை எனக்குக் கொடுத்த என் குருநாதருக்கும், அதை ஏற்றுக் கொண்டு எனக்கு வாய்ப்பளித்த இயக்குநர் சி.எஸ்.கார்த்திகேயன், நாயகன் அசோக் செல்வன் மற்றும் தயாரிப்பாளர்கள் அனைவருக்கும் நன்றி "என்று பேசினார்.

மூன்றாவது ஒளிப்பதிவாளரான பிரபு ராகவ் பேசும் போது,

"எல்லோருக்கும் வணக்கம். வாய்ப்புக் கொடுத்த தயாரிப்பாளர்கள் அனைவருக்கும் நன்றி. இயக்குநர் கார்த்திகேயன் அவர்களுக்கு நன்றி. நாயகன் அசோக் செல்வன் சாருக்கு நன்றி. இப்படத்திற்கு பத்திரிக்கை நண்பர்கள் ஆதரவு கொடுக்க வேண்டும். "என்று பேசினார்.

நக்சலைட் யூடியூப் புகழ் நடிகர் அருண் பேசும் போது,

"இந்த சபாநாயகன் திரைப்படத்தில் நடித்தது எனக்கு கிடைத்த பெரிய வாய்ப்பு. என் திரைப்பயணத்தில் இப்படி ஒரு முக்கியமான வாய்ப்பைக் கொடுத்த இயக்குநர் சி.எஸ்.கார்த்திகேயன் அவர்களுக்கு என் முதல் நன்றி. என்னை விட என் மேல் அதிக நம்பிக்கை வைத்திருந்த இயக்குநரின் நம்பிக்கையை நான் காப்பாற்றி இருக்கிறேன் என்று நம்புகிறேன். இப்படத்தில் என்னோடு சேர்ந்து நடித்த சக யூடியூபர்ஸ் ஆன ஜெய்சீலன் ஸ்ரீராம் போன்றோருக்கு என் வாழ்த்துக்கள். அவர்களோடு இணைந்து நடித்தது மறக்க முடியாத மிகச்சிறந்த அனுபவம். அது போல் மைக்கேல் அண்ணன் உடன் நடித்ததும் மறக்கமுடியாத அனுபவம். அவருடனான காட்சிகள் இல்லை என்றாலும் கூட, எங்களுக்கு பின்னாலிருந்து பெரும் ஊக்கம் கொடுத்தார். பாலசுப்ரமணியம் சாரின் ஒளிப்பதிவில் நடித்ததை கௌரவமாக கருதுகிறேன். அவருக்கும் மற்ற கேமராமேன்களுக்கும் என் நன்றி, பாடல்கள் மிகவும் சென்சேஷனாக உள்ளது. சிறப்பான பாடல்களை இப்படத்திற்கு கொடுத்த இசையமைப்பாளருக்கு நன்றி. அசோக் சாருக்கு நன்றி. முதல் நாள் காட்சி சூட் செய்யும் போது எனக்கு தனிப்பட்ட பிரச்சனைகள் இருந்தது. நான் அந்த குழப்பத்திலும் அசோக்செல்வன் சாருடன் இணைந்து நடிக்கிறோம் என்கின்ற பதட்டத்திலும் ஏதோ நடித்தேன். அதை புரிந்து கொண்டு அசோக்செல்வன் சார் என்னிடம் வந்து பேசினார். நீ என்ன யோசிக்கிறாய்.. உனக்கு என்ன பயம் என்று எனக்குத் தெரியும்ஞ் இது நம்ம படம்.. இப்படத்தின் வெற்றிக்கு நாம் உழைக்கிறோம். கேசுவலாக இரு.. கோயம்புத்தூரில் உன் நண்பர்களுடன் நடிக்கும் போது எப்படி இருப்பாயோ அப்படியே இரு.. நான் ஒரு ஹீரோ என்பதை எல்லாம் மறந்துவிடு என்று என் தயக்கங்களை போக்கினார். அவருக்கு மிக்க நன்றி அவரிடம் நிறைய கற்றுக் கொண்டேன். அவரிடம் நான் கற்றுக்கொண்ட விஷயங்கள் எனக்கு பின்நாளிலும் கண்டிப்பாக உதவும் என்று தோன்றுகிறது.. சபாநாயகன் திரைப்படத்தை அனைவரும் குடும்பத்தோடு பாருங்கள். பத்திரிக்கை நண்பர்கள் இப்படத்திற்கு ஆதரவு தாருங்கள்" என்று பேசினார்.

நடிகை விவியா பேசும் போது,

"எல்லோருக்கும் வணக்கம். இயக்குநர் மற்றும் தயாரிப்பாளருக்கு மிக்க நன்றி. என்னுடைய தாய்மொழி மலையாளம் என்பதால் என்னுடைய தமிழ் சிறப்பாக இருக்காது. மன்னிக்கவும். இது என் முதல் தமிழ்ப்படம் எல்லோரும் படத்திற்கு ஆதரவு தந்து இதை ஒரு ப்ளாக் பஸ்டர் ஆக்க கேட்டுக் கொள்கிறேன். இந்த நிகழ்விற்கு வந்திருக்கும் பத்திரிக்கை நண்பர்கள் அனைவருக்கும் நன்றி." என்று பேசினார்.

எருமை சாணி யூடியூப் புகழ் நடிகர் ஜெய்சீலன் பேசும் போது, "இது என் திரைபயணத்தில் ஒரு முக்கியமான இலக்கு என்று சொல்லுவேன். யூடியூப் சேனல் மூலமாக இயக்குநர் சி.எஸ்.கார்த்திகேயனை சென்று அடைந்து, இன்று அவர் இயக்கிய திரைப்படத்தில் ஒரு கதாபாத்திரத்தில் நடித்து இந்த மேடை மீது நின்று கொண்டிருக்கிறேன். இயக்குநரின் பெயர் சி.எஸ்.கார்த்திகேயன். அதாவது சுருக்கமாக சி.எஸ்.கே. சி.எஸ்.கேவின் ரிசல்ட் நாம் அனைவருமே அறிவோம். இயக்குநரின் ரிசல்ட்டும் அது போன்ற வெற்றியாகத் தான் இருக்கப் போகிறது. சபாநாயகன் திரைப்படத்தின் டீம் பெரிய டீம். படப்பிடிப்பு தளத்தில் இயக்குநர் வசன உச்சரிப்புகளில் மிகவும் கவனமாக இருப்பார். நாங்களும் சிறப்பாக மனப்பாடம் செய்துவிட்டு ஸ்பாட்டில் ஏதோ உளறிக் கொண்டு இருப்போம். டங்க் ட்விஸ்டர் போல இருக்கும். ஜாலியாக வேலை வாங்கக் கூடிய நல்ல இயக்குநர். இரண்டாவது ஷெட்யூல் சூட்டிங் செய்யும் போது காலில் அடிபட்டுவிட்டது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் போல் படப்பிடிப்புத் தளத்தில் படுத்துக் கொண்டே டைரக்ட் செய்தார். அருண் அண்ணா சொல்லியது போல் அசோக் செல்வன் சார் மிகச் சிறந்த ஐஸ் ப்ரேக்கர். நம்மிடம் இருக்கும் தயக்கங்களை அவரே புரிந்து கொண்டு அவைகளை உடைத்து எறிவார். அவர் அழும் காட்சியின் போது அவரைக் கட்டிப் பிடித்து ஆறுதல் சொல்லி நடிக்க வேண்டும். அவரின் தலைமுடி கலைந்துவிடுமோ என்கின்ற தயக்கத்தில் பட்டும் படாமல் கட்டிப் பிடித்து ஆறுதல் சொல்லி நடித்தேன். அதை புரிந்து கொண்டவர், இந்த டேக் நன்றாக வர வேண்டும் என்றால், நீ உன் நண்பனை கட்டிப்பிடித்து ஆறுதல் சொல்வது போல் இயல்பாக செய், முடி கலைந்தால் சரி செய்ய ஆட்கள் இருக்கிறார்கள் என்று கூறி தைரியம் கொடுத்தார். சபா என்கின்ற வார்த்தையை திருப்பிப் போட்டால் பாசம் என்று வரும், அவர் ஒரு பாச நாயகன். அவருக்கு இப்படத்தில் எல்லாமே மூணு தான், அஸிஸ்டெண்ட் மூணு பேர், ஹீரோயின் மூன்று பேர், நண்பர்கள் மூன்று பேர், நித்தம் ஒரு வானம், போர் தொழில், அதைத் தொடர்ந்து மூன்றாவது வெற்றியாக இந்த சபா நாயகன் இருக்கும். படப்பிடிப்பு தளத்தில் அசோக் செல்வன் சாரை மச்சான் மச்சான் என்று கூப்பிடுவோம். பிறகு சார் என்று சொல்லுவோம். ஆனால் படத்தில் அவரின் அக்காவாக நடித்தவரைப் பார்த்தவுடன் அவரை எப்பொழுதுமே மச்சான் என்று கூப்பிடத் துவங்கிவிட்டேன். லியோன் ஜேம்ஸ் அவர்கள் இசையில் நடித்ததும், பாலசுப்ரமனியம் சார் ஒளிப்பதிவில் நடித்ததும் மிகப்பெரிய கௌரவமாக கருதுகிறேன். செடி வளர மண் முக்கியம் தயாரிப்பாளர் அய்யப்பன் மற்றும் பிற தயாரிப்பாளர்கள் இணைந்து இந்த சபாநாயகன் என்னும் செடி வளர அரும்பாடுபட்டு இருக்கிறார்கள் என்றார்.

படத்தின் நாயகிகளில் ஒருவரான கார்த்திகா முரளிதரன் பேசும் போது,

"தமிழில் பேசுவது கடினம், அதனால் ஆங்கிலத்தில் பேசுகிறேன். தவறாக நினைக்க வேண்டாம். இது தமிழில் என் முதல் படம். தமிழ் இந்த இண்டெஸ்ட்ரியில் பணியாற்றுவது பெருமையாக இருக்கிறது, மதன் சார், அய்யப்பன் சார் என என் தயாரிப்பாளர்கள் அனைவருக்கும் நன்றி. அசோக்செல்வன் படப்பிடிப்பு தளத்தில் நிறையவே சப்போர்ட்டிவ்வாக இருந்தார். எனக்கு ஆடிஷன் பாலசுப்ரமணியன் சார் கேமராவில் தான் நடந்தது. அதை நான் பெருமையாக கருதுகிறேன். பிரபு சார் என்னை மிகவும் அழகாக காட்டி இருக்கிறார். அவருக்கு நன்றி. இது ஒருவகை நாஸ்டால்ஜியா ப்லிம், எல்லாவித வயதினருக்குமான காட்சிகள் படத்தில் இருக்கும். பள்ளி கால, கல்லூரி கால, மணவாழ்க்கை கால கட்டங்கள் இப்படத்தில் இடம் பெற்றுள்ளது. குடும்பத்தோடு பாப்கார்ன் சாப்பிட்டுக் கொண்டே நீங்கள் இப்படத்தை ரசிக்கலாம். ஒவ்வொரு தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் நடிகர்கள் என எல்லோருமே இந்தக் கதையில் மிகுந்த நம்பிக்கை கொண்டு இருக்கிறோம். இப்படம் மிகப்பெரிய வெற்றி பெறும் என்று மிகுந்த நம்பிக்கை இருக்கிறது என்றார்.

படத்தின் தயாரிப்பாளர்களில் ஒருவரான அய்யப்பன் ஞானவேல் அவர்கள் பேசும் போது,

"இப்படத்திற்கு என்னையும் சேர்த்து மூன்று தயாரிப்பாளர்கள். அரவிந்தன், மேகவாணன் என இன்னும் இருவரிருக்கிறார்கள். அவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் சார்பாகவும் நான் உங்களிடம் பேசுகிறேன். இது ஒரு ஜாலியான படம். மூன்று புதுமுக யூடியூபர்ஸ், அருண் ஸ்ரீராம், ஜெயசீலன், இப்படத்தில் நடித்திருக்கிறார்கள். மூவருமே சிறப்பாக நடித்திருக்கிறார்கள். மூன்று கேமராமேன்கள் பணியாற்றி இருக்கிறார்கள். ஒளிப்பதிவாளர் பாலசுப்ரமணியம் இப்படத்திற்கு ஒளிப்பதிவு செய்ய ஒப்புக் கொண்டு எங்களுக்கு கிடைத்த பாக்கியம் என்றே சொல்லுவேன். தினேஷ் புருஷோத்தமனின் ஒளிப்பதிவும் சிறப்பாக இருந்தது. அவருக்கும் எங்கள் நன்றி., பிரபு ராகவ் ஆரம்பத்தில் இப்படத்தில் பணியாற்ற மிகவும் பயந்தார். அவரின் ஒளிப்பதிவும் சிறப்பாக இருந்தது. இயக்குநர் எங்களின் நண்பர். ஒரு விசயம் வேண்டும் என்றால் கண்டிப்பாக அது அவருக்கு வேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பார். நல்ல நேர்மறையான சிந்தனைகள் எண்ணங்கள் கொண்ட இயக்குநர், அவருக்கு வாழ்த்துக்கள். இரண்டாவது செட்யூலில் கால் உடைந்த போதும் படப்பிடிப்பை எந்தவித தாமதமும் இன்றி முடித்துக் கொடுத்தார். பாலிவுட்டில் புகழ்பெற்ற பி.கே. 3 இடியட்ஸ் போன்ற படங்களின் கேமராமேன் ஆன முரளிதரனின் மகள் தான் கார்த்திகா, அவருக்கு நன்றிகளும் வாழ்த்துக்களும். எடிட்டர் கணேஷ் என் நண்பர் தான். அயலி, விலங்கு போன்றவற்றில் சிறப்பாக எடிட்டிங் செய்து இருந்தார். இப்படத்திலும் அவரின் எடிட்டிங் பணி சிறப்பாக இருந்தது. என் நண்பரின் நண்பர். லியோன் ஜேம்ஸ் மியூசிக்கில் பட்டையை கிளப்பி இருக்கிறார். எங்களின் வெல் விஷ்சர்ஸ். முதலில் ஜேம்ஸ் அவர் தான் இந்த பிராஜெக்ட் துவங்க காரணம், அடுத்து குமார் அண்ணன் அவரும் தயாரிப்பாளர் தான், என்கரேஜ் செய்து பல ஆலோசனைகள் கொடுத்தார், அடுத்து மதன் சார் அவருக்கு நன்றி. அவர் எங்களுக்கு மெண்டார் போல செயல்பட்டு வருகிறார். அசோக் செல்வனுக்கு நன்றி, ஜாலியாக பழகக்கூடியவர். எதையும் வெளிப்படையாக பேசுவார், பந்தா இல்லாதவர், சமீபத்தில் தான் கல்யாணம் ஆகி இருக்கிறது. அதற்கும் சேர்த்து அவருக்கு என் வாழ்த்துக்கள் என்றார்.

நாயகன் அசோக் செல்வன் பேசும் போது,

"எல்லோருக்கும் வணக்கம். எப்பொழுதுமே பத்திரிக்கையாளர்களை சந்திப்பது என்பது எனக்கு தனிப்பட்ட முறையில் மகிழ்ச்சியான தருணம். என்னுடைய எல்லாப் படங்களையுமே மக்களிடம் கொண்டு சேர்த்து நான் இந்த இடத்தில் இன்று இருப்பதற்கு நீங்கள் தான் முழுமுதற்காரணம்.

சபாநாயகன் ஜாலியான க்ளீனான எண்டர்டெயினர் திரைப்படம். நடனம் மற்றும் நகைச்சுவைக்காக இப்படத்தில் நான் நிறையவே மெனக்கெட்டிருக்கிறேன். இந்த இரண்டுமே எனக்கு இப்படத்தில் புதியதாக இருந்தது. இயக்குநர்கள் இது போன்ற புதிய வாய்ப்பை கொண்டு வரும் போது தான் என்னைப் போன்ற நடிகர்கள் அதை பயன்படுத்திக் கொள்கிறோம். நான் இவ்வளவு ஹியூமர் செய்வேனா என்று மதன் சார் என்னிடம் ஆச்சரியப்பட்டார். முன்பே எனக்கு நக்கலைட்ஸ் சேனல் மிகவும் பிடிக்கும். ஸ்ரீராம் ஜெய்சீலன், அருண் போன்றோர் மிகச் சிறப்பாக நடித்துள்ளனர். படப்பிடிப்பு தளத்தில் அவர்களிடம் பல ரசிக ரசிகைகள் மொய்த்துக் கொண்டு ஆட்டோகிராஃப் வாங்கினார்கள். அப்பொழுது தான் அவர்களைப் பற்றி தெரிந்து கொண்டு அவர்களின் வீடியோக்களை அதிகமாக பார்த்தேன். அவர்கள் அனைவருக்கும் சிறந்த எதிர்காலம் இருக்கிறது. ஜெய்சீலனை ஜூனியர் சிவகார்த்திகேயன் என்றே சொல்லுவேன். தயாரிப்பாளர் அய்யப்பனை எனக்கு மிகவும் பிடிக்கும். லியோன் ஓ மை கடவுளே படத்தில் மிகச்சிறப்பான பாடல்களை கொடுத்திருந்தார். இப்படத்திலும் கேட்டதும் பிடிக்கும்படியான பாடல்கள் உள்ளன. பாலசுப்ரமனியம் சார், தினேஷ், பிரபு ராகவ் அனைவருக்கும் நன்றி. மதன் சார் ஆபிஸில் பலமுறை காத்து இருந்திருக்கிறேன். இன்று அவர் வழிநடத்தி செல்லும் தயாரிப்பாளர் தயாரிக்கும் படத்தில் நாயகனாக நடிப்பது பெருமையாக இருக்கிறது. மூன்று நாயகிகளுடன் நெருக்கமாக நடித்தது பற்றி கேட்கிறீர்கள். நெருக்கத்தில் என்ன கேப் இருக்க முடியும் சார். என் மனைவி கீர்த்தி அந்த மாதிரி எதுவும் தவறாக நினைக்கமாட்டார். முதல் காதல், பள்ளிகால வாழ்க்கை, போன்ற மறக்கமுடியாத நினைவுகள் நம் மனங்களில் அழியாமல் எப்போதும் இருக்கிறது. அவைகளை கிளறிவிடும் திரைப்படமாக சபாநாயகன் இருக்கும். மேலும் உங்களின் மனச்சோர்வுகளுக்கும் மன அழுத்தத்திற்கும் அரும் மருந்தாக சபாநாயகன் திரைப்படம் இருப்பதோடு, ஏற்கனவே சொன்னது போல் ஒரு நாஸ்டால்ஜியா பயணம் சென்றுவந்த உணர்வைக் கொடுக்கும். பத்திரிக்கை நண்பர்கள் என் பிற படங்களுக்குக் கொடுத்த அதே ஆதரவை இப்படத்திற்கும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
தினசரி காலை நாளிதழ்
hellomadrasdaily@gmail.com
உள்ளது உள்ளபடி



# தெரு நாய்களால் பொதுமக்கள் அச்சம்; 93 ஆயிரம் நாய்களுக்கு தடுப்பூசி: சென்னை மாநகராட்சி திட்டம் - கமிஷனர் ராதாகிருஷ்ணன்



சென்னை, 28 நவம்பர் 2023: சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள சுமார் 93 ஆயிரம் நாய்களுக்கும் வெறிநாய் தடுப்பூசி மற்றும் ஒட்டுண்ணியை நீக்குவதற்கான மருந்தையும் ஊசி மூலம் செலுத்த சென்னை மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

சென்னையில் தெருநாய்கள் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சாலைகளில் நடந்து செல்பவர்களை பல இடங்களில் தெருநாய்கள் விரட்டி விரட்டி கடிக்கின்றன. குறிப்பாக இரவு நேரங்களில் மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் அச்சத்துடனேயே பயணிக்க வேண்டிய நிலை உள்ளது.

இந்த நிலையில் சென்னை ராயபுரம் ஜி.ஏ. சாலையில் நடந்து சென்று பள்ளி குழந்தைகள் உள்பட 29 பேரை வெறிநாய் ஒன்று கடித்து குதறியது. இதில் காயம் அடைந்த அனைவரும் ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்கு வெறிநாய் கடித்ததில் ரேபிஸ் நோய் பாதிப்பு ஏற்பட்டது தெரிய வந்தது.

இதையடுத்து 29 பேருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. ரோட்டில் சென்றவர்களை கடித்து குதறிய வெறிநாயை பொதுமக்களே அடித்து கொன்றனர்.

இதேபோல் தண்டையார்பேட்டை 4-வது மண்டலத்துக்குட்பட்ட கொடுங்கையூர் எம்.கே.பி.நகர் மற்றும் வியாசர்பாடி பகுதிகளில் மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள், நடந்து சென்ற பெண்கள் என 8 பேரை தெருநாய்கள் கடித்துள்ளன.

இதுதொடர்பாக சென்னை மாநகராட்சி கமிஷனர் ராதாகிருஷ்ணன் கூறியதாவது:-

சுப்ரீம் கோர்ட் உத்தரவு மற்றும் விலங்குகள் நலவாரியத்தின் வழிகாட்டுதல்களை பின்பற்றியே தெருநாய்களை பிடித்து கருத்தடை ஆபரேஷன் செய்து வருகிறோம். அதிலும் சில சிக்கல்கள் உள்ளன. பாலூட்டும் நாய்களுக்கும், கர்ப்பமாக இருக்கும் நாய்களுக்கும், நோய்வாய்ப்பட்டிருக்கும் நாய்களுக்கும் கருத்தடை ஆபரேஷன் செய்ய முடியாது. அதே நேரத்தில் கருத்தடை மற்றும் வெறிநாய் தடுப்பூசிகளை நாய்களுக்கு போடும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

சுமார் 1 லட்சம் நாய்கள்

சென்னையில் உள்ள சுமார் 1 லட்சம் நாய்களை பிடித்து தடுப்பூசி போட முடிவு செய்யப்பட்டுள்ளது. தினமும் சுமார் 900 நாய்களுக்கு தடுப்பூசி போடுவதற்கு மாநகராட்சி ஊழியர்கள் பணியாற்றி வருகிறார்கள். இந்தியாவிலேயே சென்னை மாநகராட்சியில் தான் நாய்களை பிடித்து தடுப்பூசிகளை போடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒரு இடத்தில் பிடிக்கும் தெருநாய்களுக்கு கருத்தடை ஆபரேஷன் மற்றும் தடுப்பூசி போடும் பணிகள் முடிந்ததும் மீண்டும் அதே இடத்தில்தான் கொண்டு விடுகிறோம்.

இவ்வாறு ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தடுப்பூசி போடப்பட்டு பின்னர் அதே தெருவில் தடுப்பூசி செலுத்திய நாய்களை அடையாளம் காணும் வகையில் அவைகளின் உடலில் ஒரு பகுதிகளில் வண்ணம் தீட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# டிசம்பர் 1-ந்தேதி முதல் மலேசியாவுக்கு விசா இல்லாமல் சீனா, இந்தியர்கள் பயணிக்கலாம்



சென்னை, 28 நவம்பர் 2023: டிசம்பர் 1ம் தேதி முதல் இந்தியா மற்றும் சீனாவைச் சேர்ந்தவர்கள் விசா இல்லாமல் மலேசியாவுக்கு பயணிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவிற்குச் செல்லும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக புதிய நடைமுறை அறிமுகம் செய்வதாக மலேசிய பிரதமர் அன்வார் இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கூறியதாவது:- சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு, சீனா மற்றும் இந்தியாவையும் சேர்ந்தோர் இனி விசா இன்றி மலேசியாவுக்குள் நுழையலாம்.

இந்தியா, சீனாவைச் சேர்ந்தவர்கள் மலேசியாவில் விசா இன்றி 30 நாள்கள் வரை தங்கலாம். இந்த புதிய நடைமுறை அடுத்த மாதம் (டிசம்பர் ) 1-ந்தேதி முதல் அமுலுக்கு வருகிறது.

விசா தேவையில்லை என்றாலும் பயணிகள் குற்றப்பின்னணி அல்லது வன்முறையில் ஈடுபட்டிருக்கின்றனரா என்பதை அறியப் பாதுகாப்புச் சோதனைகள் நடத்தப்படும். இந்தியாவை விட சீனாவிலிருந்து அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப்பயணிகள் மலேசியாவிற்கு வர அதிக வாய்ப்புள்ளது எனக் குறிப்பிட்டார்.

# இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்தம்: உலக நாடுகள் வரவேற்பு அமைதி என்றும் நிலவ களம் இறங்க இந்தியா தயார்




சென்னை, 28 நவம்பர் 2023: அக்டோபர் 7, பாலஸ்தீன ஆயுதம் ஏந்திய போராளிகள் காசா எல்லைக் கட்டுப்பாடுகளை மீறி இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்திட இரு நாளில் இஸ்ரேல் பாலஸ்தீனியர்கள் மீது எதிர்தாக்குதலை துவக்கியது. அதன் தொடர்ச்சியாய் இரு தரப்புகளிடம் இருந்தும் தாக்குதல்கள் தொடர, அப்பாவி பொதுமக்கள் மீது தாக்குதல்கள், அதில் பலர் மரணம் போன்ற செய்திகளே ஊடகங்களில் பிரதானமாய் இடம் பிடித்தது.

அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆதரவாக அணி திரட்டும் பணிகளில் ஈடுபட, உக்ரைன் யுத்த காட்சிகள் மெல்ல ஊடகங்களில் பார்வையில் இருந்து மறைய துவங்கி வருகிறது!

உக்ரைன் பிரச்சினை தீர்ந்ததா? ஆப்கானில் சகஜ வாழ்க்கை நிலை வந்துவிட்டதா? இதுபற்றி எந்த தகவல் திரட்டும் கிடைக்காத நிலையில் ஊடகங்களின் பார்வை இஸ்ரேல் ரூ பாலஸ்தீன நடவடிக்கைகள் மீது பாய்ந்து இருப்பது ஏன்? என்று புரிகிறது.

எது எப்படியோ, கடந்த மூன்று நாட்களுக்கும் மேலாக போர் நிறுத்தம் என இஸ்ரேலும் ஹமாஸ் அமைப்பும் அறிவித்ததைத் தொடர்ந்து வெடிச் சத்தங்கள் நின்றுவிட்டது. நிசப்தம் நிலவுவதுடன் இரு தரப்பினராலும் பிணையக் கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டு இருக்கும் பலரை அதிகாரபூர்வமாக பத்திரமாக விடுவித்து வருவதை ஊடகங்களில் பார்க்கும்போது ஆறுதலாகத் தான் இருக்கிறது. ஹமாஸ் தீவிரவாதிகள் கடந்த அக்டோபர் 7ரூ-ம் தேதி இஸ்ரேலுக்குள் திடீரென புகுந்து நடத்திய தாக்குதலில் 1,200 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 240 பேரை அவர்கள் பிணைக் கைதிகளாக பிடித்துச் சென்றனர்.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 14,800 பேர் வரை உயிரிழந்திருப்பதாக பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் தெரிவித்தது. இத்தகைய தாக்குதல்கள் கடந்த 40 ஆண்டுகளாகவே தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. தற்போதைய போர் நிறுத்தம் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று தான் என்றாலும் அது நிரந்தரத் தீர்வு என்பதாக தெரியவில்லை.

மத, இன சச்சரவுகள் மட்டுமின்றி எண்ணை வளத்தை ஆதிக்கம் செலுத்தும் உரிமையை இரு தரப்பும் விட்டா கொடுக்கும்!

இஸ்ரேலின் அருகாமை கடல் பகுதியான பாலஸ்தீனத்தில் காசா பகுதியில் மிகப்பெரிய புதையலாய் இயற்கை எரிவாயு வெளியே எடுக்கப்படாமல் இருக்கிறது.

அருகாமை எண்ணை வள நாடுகளின் கையிருப்பை விட மிக அதிகமான வளம் இங்கு இருக்கிறது.

இஸ்ரேலுக்கு அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாட்டோ நாடுகள் நேரடியாக ஆதரவு தெரிவித்து நட்பு நாடாக அறிவித்துள்ளது.

பாலஸ்தீனர்கள் காசா அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி சர்வதேச அமைப்புகளில் தங்களது உரிமையையும் நிலைப்பாட்டையும் தெரிவித்து வருகிறது.

இஸ்ரேலுக்கு வல்லரசுகளின் ஆதரவு இருப்பதால் இதுவரை பாலஸ்தீன மக்கள் எந்த செல்வசெழிப்பு நன்மையையும் அனுபவிக்க முடியாது திணறுகிறார்கள்.

பாலஸ்தீனர்கள் ஜனநாயக முறையில் தேர்வு செய்த ஆட்சியாளர்கள் ஹமாஸ் குழுமம் பதவி ஏற்றாலும் அவர்கள் ஐ.நா. உட்பட எந்த சர்வதேச அமைப்பின் அங்கீகாரத்தையும் பெற முடியவில்லை.

இஸ்ரேலும் பாலஸ்தீனுக்கு உரிய தொழில்நுட்பங்களையும் போக்குவரத்து வழித்தடங்களையும் திறந்துவிட மனம் இல்லை.

தங்களை விட மிக சிறிய நாடு தங்களையும் மிஞ்சிய வல்லரசாக வளர மனம் ஏற்கவில்லை! ஆக இந்த சிக்கலின் ஆணிவேராக இருக்கும் சிக்கல் யார் அப்பகுதியில் உள்ள இயற்கை வளத்தை கட்டுப்படுத்துவார்கள்? என்பது தான்.

முன்னாள் இங்கிலாந்து பிரதமர் டோனி பிளேர் 10 ஆண்டுகளுக்கு முன்பு தந்த அமைதி ஒப்பந்த சரத்து என்ன தெரியுமா?

பாலஸ்தீனம் இயற்கை எரிவாயுவை இஸ்ரேலிடம் மட்டுமே சந்தை விலையை விட 15 சதவிகிதம் குறைச்சலாக விற்க வேண்டும்.

அந்த விற்பனைக்கு கிடைக்கும் அத்தனை தொகையும் அமெரிக்க டாலர் பணமாக மட்டுமே வர்த்தகமாக வேண்டும்.

அந்த பணம் அப்படியே அமெரிக்க வங்கியில் வைப்பு நிதியாக இருக்க வேண்டுமாம். பாலஸ்தீன ஆட்சியாளர்களின் உணவு, மருத்துவம், கட்டுமான தேவைகளுக்கு மட்டும் உரிய ஆவணங்களை தந்து அனுமதி பெற்று அனுமதிக்கப்படும் தொகையை எடுத்துக் கொள்ளலாம்!

இந்த ஏற்பாடு ஏன்? என்றால் பாலஸ்தீனத்தில் கிடைக்கும் வருவாயில் நவீன ராணுவ தளங்களுக்கு செலவிட்டு இஸ்ரேலை வசப்படுத்தி விடக்கூடாது என்பதற்காக இருக்கலாம்!

இது வல்லரசுகளால் செய்யக்கூடிய நேரடிக் கட்டுப்பாட்டு சதி!

முன்பு இந்தியாவில் ஆங்கிலேயர் நடத்திய ஆட்சி முறை! பல நாடுகளில் அமெரிக்கா நடத்திய அடக்குமுறை ஆட்சிமுறை! இதைப் போலத்தான் பாலஸ்தீனத்தில் கிடைக்கும் பெட்ரோலியப் பொருள்களின் பல கோடிக்கணக்கான டாலர் மதிப்புள்ள வருவாயைச் சுரண்டும் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாட்டோ நாடுகள் நேரடி சதித்திட்ட ஆட்சிமுறை ! போர்முறை !!

இதை பாலஸ்தீனம் ஏற்க மறுத்து விட்டது. அன்று ஜனநாயக ஆட்சி நடந்து கொண்டு இருந்ததால் அந்நாட்டு மக்கள் நலனுக்கு குரல் கொடுத்த நாடுகளில் இந்தியாவும் உண்டு.

ஹமாஸ் அக்டோபர் 7 அன்று நடத்திய தாக்குதலை கண்டித்த நாம், இஸ்ரேலுக்கு எதிராய் பலமுறை அநீதிக்கு துணை போகாமல் எதிர்குரல் கொடுத்துள்ளோம்.

கடந்த மூன்று நாட்களாக நிலவும் போர் நிறுத்தம் வரவேற்கப்பட வேண்டியது என்று தான் கூற வேண்டும். அமெரிக்காவும் வரவேற்று இருப்பது போல் ரஷ்யா, சீனா, ஐரோப்பிய யூனியன், எகிப்து, கத்தார் முதலிய நாடுகளும் மகிழ்ச்சியுடன் இம்மாற்றத்தை வரவேற்கிறது.

ஆனால் இஸ்ரேலின் அமைச்சர் ஒருவர் கூறியிருப்பது:ரூ "இப்படி அமைதி காத்தால் ஹமாஸ் மீண்டும் ஆயுதங்களை பெற்று பலசாலிகளாக மாறி தாக்கக்கூடும்" என்பதே.

ஆக தற்போதைய அமைதி உடனடி முதல்கட்ட சிகிச்சை மட்டுமே; நோயின் தன்மை அறிந்து, தெரிந்து அதன் முழு வடிவத்தை புரிந்து கொண்டு அதைக் குணப்படுத்த மேற்கொண்டு இருக்கும் மருத்துவ சிகிச்சை கிடையாது.

உலகில் அமைதி என்றும் நிலவக் களம் இறங்க இந்தியா தயார்.

அதற்கான காலம் கனிந்து வருகிறது.

இந்நிலையில் இந்தியா இச்சிக்கலுக்காக பிற நாடுகளையும் சர்வதேச அமைப்புகளையும் சரியான தீர்வுக்காக இணைந்து செயல்பட வைக்க செயல்பட்டாக வேண்டும்.

# வளர்ச்சியடைந்த பாரதம் இலக்கை நோக்கிய பயணத்தின் நகர்ப்புற இயக்கம் தில்லியில் தொடங்கியது



சென்னை, 28 நவம்பர் 2023: மத்திய அரசால் தொடங்கப்பட்ட பல்வேறு நலத் திட்டங்களின் பயன்களை அடைவதற்கு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வளர்ச்சியடைந்த பாரதம் இலக்கை நோக்கிய பயண இயக்கம் நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது. தலைநகர் தில்லியில் கஜூரி சவுக்கில் நடைபெற்ற இதற்கான பிரச்சார வேன்கள் சேவையை துணைநிலை ஆளுநர் வி.கே.சக்சேனா இன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, சிறப்பாக வடிவமைக்கப்பட்ட 5 ஐ.இ.சி (தகவல், கல்வி, தகவல் தொடர்பு) வேன்கள் டெல்லியின் 11 மாவட்டங்களில் 600க்கும் மேற்பட்ட இடங்களில் பயணிக்கும். பிரதமரின் சாலையோர வியாபாரிகள் நலத்திட்டம், முத்ரா கடன்கள், ஸ்டாண்ட் அப் இந்தியா மற்றும் ஸ்டார்ட் அப் இந்தியா, டிஜிட்டல் பேமெண்ட், பிரதமரின் மின்சார பேருந்து சேவை, ஆயுஷ்மான் பாரத், பிரதமரின் நகர்ப்புற வீட்டுவசதி திட்டம், பிரதமரின் இலவச எரிவாயு சிலிண்டர் திட்டம் போன்ற மத்திய அரசின் நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை பரப்புவதை, நகர்ப்புற பிரச்சாரம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் பேசிய துணைநிலை ஆளுநர் வி.கே.சக்சேனா, நாடு முழுவதும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிக்கும் அதே நேரத்தில் "வளர்ந்த இந்தியா" என்ற கனவை நிறைவேற்றுவதற்கான ஒரு முக்கிய படியாக வளர்ச்சியடைந்த பாரதம் இலக்கை நோக்கியப் பயண இயக்கம் உள்ளது என்று தெரிவித்தார். குறிப்பாக தூய்மை, வேலைவாய்ப்பு உருவாக்கம், ஆயுஷ்மான் பாரத், பிரதமரின் வீட்டுவசதித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை பிரதமர் தலைமையிலான மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக கூறினார். இந்த திட்டங்கள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், அதிக எண்ணிக்கையிலான மக்களை, குறிப்பாக நலிவடைந்த பிரிவினரை இந்த திட்டங்களின் வரம்பிற்குள் கொண்டு வருவதையும் இந்தப் பயணம் நோக்கமாகக் கொண்டுள்ளது" என்று திரு சக்சேனா கூறினார்.

தொடக்க நிகழ்வின் போது, துணைநிலை ஆளுநர் அனைத்து பிரமுகர்கள், மக்களுக்கு வளர்ச்சியடைந்த பாரதம் இலக்கை நோக்கிய பயணம் என்ற உறுதிமொழி எடுக்கவைத்தார். பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, தில்லியின் பல்வேறு இடங்களில் பிரதமரின் சாலையோர வியாபாரிகளுக்கான கடன் திட்ட முகாம், சுகாதார முகாம், ஆயுஷ்மான் அட்டை முகாம், ஆதார் புதுப்பிப்பு முகாம், பிரதமரின் இலவச எரிவாயு சிலிண்டர் முகாம் போன்ற சேவைகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்யும்.